விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 13 வியாழக்கிழமை (27.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜெனிவாவில் ஒலித்தது சர்வதேச விசாரணை

**• நவநீதம்பிள்ளை விடாப்பிடி • நாடுகள் பல வரவேற்பு • இலங்கை நிராகரிப்பு**

(ஜெனிவா)

**இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போதும், அதன் பின்னரும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரின் 25 ஆவது அமர்வில் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை அம்மையாரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை நவநீதம்பிள்ளை அம்மையார் ஆணித்தரமாக வலியுறுத்தி கூறியுள்ளார்.

இருப்பினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளையினால் இலங்கை குறித்து ஐ.நா அமர்வில் சமர்ப்பக்கப்பட்டுள்ள அறிக்கையை முழுமையாக நிராகரிப்பதாகவும் குறித்த அறிக்கையானது அரசியல் மயமானதும் அப்பட்டமான தவறுகளையும் கொண்டதாகவும் உள்ளது என்று ஜெனிவாவுக்கான இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இலங்கையில்

19 ஆம் பக்கம் பார்க்க..

## ரி.ஐ.டியினரின் பார்வை வடக்கில் மும்முரம்

### மேலும் இருவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் கைது நடவடிக்கைகள் வடக்கில் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் யாழ்.மாவட்டத்தில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியினைச் சேர்ந்த மோகன் கேதீஸ் என்ற இளைஞனை பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை யாழ்.ஒட்டுமடம் பகுதியில் வைத்து கைதுசெய்துள்ள

19 ஆம் பக்கம் பார்க்க..

## யுத்த குற்றச்செயல்களுக்கு இலங்கையை விசாரிக்கலாம்

### காங்கிரஸ் கட்சி தேர்தல் பல்டி

(கொழும்பு)

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமானதும், காலவரையறையுடன் கூடியதுமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க..



ஐ.நா மனித உரிமை பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஆத் அமைப்பு ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாக நேற்று புதன்கிழமை நடத்தியது.

## போர்க்குற்றங்களை விசாரணை செய்ய உறுப்பு நாடுகள் ஆதரவளிக்க வேண்டும்

### மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு).

இலங்கையின் போர்க் குற்றச் செயல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற தீர்மானத்திற்கு உறுப்பு நாடுகள் ஆதரவளிக்க வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

அவ் அமைப்பின் பிரதிநிதி மேலும் கூறுகையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம்பெற்றதாக சுமத்தப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேணடியது அவசியமானது.

குற்றச் செயல்களில் ஈடுபட்ட சகல தரப்பினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கும் இலங்கை அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை.

இதன் மூலம் மனித உரிமை மறல் விவகாரத்தில் இலங்கை உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை விரைந்து உரிய

19 ஆம் பக்கம் பார்க்க..

5வது ஆண்டில்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு
Sikaram
Gateway to Education & Employment
நாளை 28-03-2014 காலை 9 மணி சிகரம் விரிவுரை மண்டபம்
ஐரோப்பிய நாடுகளான France, Germany, Switzerland, Italy , Latvia Student Visa (with Part time Job & PR) 26 நாடுகளுக்கு செல்லக்கூடிய செங்கன் விசா ஏற்பாடு.
Cyprus O/L உடன் மிகக் குறைந்த செலவில் Student Visa, A/L (Bio) 1C 2S உடன் MBBS
China குறைந்த செலவில், MBBS & Dental (SLMC, EFMG-USA, GMC-UK, WHO, UNESCO Approved) & Scholarship ஏற்பாடுகளுடன் Engineering
(C-6837)
சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
இல.153. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்
077 36 16 798, 021 222 00 11 www.sikaram.lk

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை இரண்டாம் அமர்வு கிளிநொச்சியில்

### ஏப்ரல் 7,8,9-ம் திகதிகளில் ஏற்பாடு

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் வடக்கு மாகாணத்திற்கான இரண்டாம் அமர்வு ஏப்ரல் மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1990-2009 ஆம் ஆண்டு கால அசாதாரண சூழ்நிலையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில ஆணைக்குழுவின் முதற்கட்ட வசாரணைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ள நிலையில் தற்போது மீண்டும வடக்கு மாகாணத்தில் இரண்டாம் கட்ட விசாரணைகள் ஆரம்பிக்க ப்படவுள்ளதாக தகவல் அதிகாரியும் இணைப்பாளருமான ரீ.ஆர்.கெல்லி தெரிவித்தார். கடந்த ஜனவரி 18-21 -ம் திகதிகளில் வடக்கு மாகாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் 440 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்தன என்று அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மூன்று தினங்

02 ஆம் பக்கம் பார்க்க..

## யாழில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பப்பெண் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்று புதன்கிழமை காலை 7.30 மணியளவில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவில், கோணாவிலையைச் சேர்ந்த லம்போதரன் நுவர்சினி என்ற 27 வயதுடைய குடும்பப் பெண்ணொருவரே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இவருக்கு 2 பிள்ளைகளும் உண்டு.

மின்சார கட்டணத்தை செலுத்த தவறியமையால் இப் பெண்ணின் வீட்டுக்குரிய மின் இணைப்பை இலங்கை மின்சார சபையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை துண்டித்துள்ளனர்.

இந்நிலையல் குறித்த குடும்பப்

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய செய்தியாளர் நேற்றுத் தாக்கப்பட்டார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் செய்தி சேகரிக்க சென்ற பிராந்திய செய்தியாளர் ஒருவர் மீது கரைச்சி பிரதேச சபை பணியாளர் ஒருவர் நேற்று புதன்கிழமை தாக்குதல் நடத்தியதுடன் செய்தியாளரின் புகைப்படக் கருவியையும் அடித்த நெருக்கிய தாக குறித்த செய்தியாளரினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த 2013 ஆம் ஆண்டிற்கான மின் கட்டணம், வாடகைப் பணம், வரிப் பணம் ஆகியவற்றை செலுத்தி இவ் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் பெறாத 30 வர்த்தக நிலையங்களுக்கு சீல் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை உத்தரவிட்டிருந்தார் என கரைச்சி பிரதேச சபை செயலாளர் ந.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இதனையடுத்து, நேற்று வர்த்தகர்களுக்கும் பிரதேச சபை நிர்வாகத்தினருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து செய்தி சேகரிப்பதற்காக அங்கு சென்ற செய்தியாளரை பிரதேச சபை பணியாளர் ஒருவர் தாக்கியுள்ளார் என பொலிஸார் கூறினர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-6)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த மாணவன் ஒருவரது பணப்பை, ஆவணங்களுடன் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணப்பையில் கெங்கேஸ்வரன் கிறேஷியன் (922103020V) என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி பற்றுச் சீட்டுக்கள் என்பன காணப்படுகின்றன.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரி காரியாலயத்தில் அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ள முடியும். (செ)


# மரண அறிவித்தல்



## அருளம்பலம் இரத்தினசிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் இரத்தினசிங்கம் (ஓய்வு நிலை ஆசிரியர்) 26.03.2014 அன்று காலமானார்.

அன்னார் லோகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருளம்பலம், பொன்னம்மாவின் அன்பு மகனும் அருளையா, அருளம்மாவின் மருமகனும் குகப்பிரியா (ஆசிரியை -கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற கங்காசுதன், கலாசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரனின் (வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காளர் வட மாகாணம்) அன்பு மாமனாரும், பிரவினன், சங்கவி, சௌமியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், தம்பித்துரை, காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, பாக்கியம், இளையதம்பி, வீரசிங்கம், வேலுப்பிள்ளை, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பக்தவத்சலம், இரதசேகரம், சுகுணவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.03.2014 இன்று வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்
மருமகன்: இராஜேஸ்வரன்
0773907687

(6009)


# ஜனாதிபதி...

களிலும் தாங்கள் சுமார 150 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்க உத்தேசித்திருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ குணதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகமகே, திமிங்கு பட்டதுருக்கே பிரியந்தி சுரஞ்சனா வித்தியாரத்ன, மனோ ராமநாதன் ஆகியோரை உள்ளடக்கிய விசாரணைக் குழுவினரே விசாரணைகளை மேற்கொண்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த ஆணைக் குழுவின் விசாரணைக் காலக்கெடு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)


# வீடு வளவு விற்பனைக்கு உண்டு

சீனட்டி, வதிரி, கரவெட்டியில் சகல வசதிகளும் கொண்ட புதிதாக சீரமைக்கப்பட்ட சுற்றுமதில் வெட்டுக் கிணறுடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

(சி-6842)

0779571698, 021 226 3321

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6839)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


# அனுமதிப் பத்திரத்தை கொண்டிராத வியாபார நிலையங்களுக்கு பூட்டு!

## கரைச்சி பிரதேச சபையினர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தையிலுள்ள வியாபாரிகளில் இவ்வாண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் கடைகள் நேற்று பிரதேச சபையினரால் மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சிப் பொதுச் சந்தையிலுள்ள சில கடைகள் இவ்வாண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

இதனையடுத்து, கரைச்சிப் பிரதேச சபையினர் இவ்வாண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாதவர்களின் கடைகளை நேற்று காலை திறக்கவிடாமல் பூட்டியுள்ளனர்.

அத்தோடு கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும் ஸ்ரிக்கரை கடையின் கதவுகளில் ஒட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் தமது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன்பின்னர் கடைகளை பூட்டிய பிரதேச சபையினருக்கும் அங்கு வந்த ஊடகவியலாளருக்குமிடையில் தகராறொன்றும் இடம்பெற்றுள்ளது. (செ-9,271)

# அமலனின் கொலையுடன் தொடர்புபட்ட ஐவர் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகள் போரில் அடித்துக் கொலை செய்யப்பட்ட அமலனின் கொலையுடன் தொடர்புபட்ட ஐந்து பேரை அமலனின் நண்பர்கள் நீதிமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அடையாளம் காட்டினார்கள்.

இதனையடுத்து அந்த ஐவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற பொன் அணிகள் போரின் போது, பழைய மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான யாழ்ப்பாணம் செட்டியார்தெருவைச் சேர்ந்த ஜெயரட்ணம் தர்ஷன் அமலன் (வயது-23) என்ற இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புபட்ட நால்வர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, மறுநாள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டு அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது, பதில் நீதவான் அவர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அதற்கமைய அவர்கள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்ட போது, அமலனின் நண்பர்களினால் அமலனைக் கொலை செய்தவர்கள் என ஐவர் அடையாளம் காட்டப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த ஐவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார். (செ-6)


# மரண அறிவித்தல்



அமரர்

## கந்தையா வேலுப்பிள்ளை

அம்பன் குடத்தனையை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை 25.03.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும் நேசரத்தினத்தின் அன்புக் கணவரும் மேகலா, மகாதேவன் (சுவிஸ்), மாலதி (லண்டன்), சுரேஸ்வரன் (சாரதி, பிரதேச செயலகம், மருதங்கேணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேல்நாயகம், ரஞ்சினி (சுவிஸ்), புண்ணியலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் பவிசியா, புவிர்சா, தனுராஜ், கோகுலராஜ், கோபிராஜ், திலீபன், இலக்கியா, விதுஷா, துவாரகா, துவர்னிகா, சர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தங்கம்மா, சிவானந்தம், நடராசா, இரத்தினம், லோகநாதன், செல்வராசா, பதுமலட்சுமி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசதுரை, புவனேஸ்வரி, புஸ்பராணி, இராசேந்திரம், வள்ளியம்மை, கலைமகள், கிருஸ்ணதாஸ், பவா, இராசம்மா, சரஸ்வதி, இராசதுரை, கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அம்பன் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அம்பன்,
குடத்தனை.

தகவல் :குடும்பத்தினர்
0771529111

(சி-6844)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ குடும்பத்தில் எத்தனைபேர் அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ளனர்

## கேள்வி எழுப்புகிறார் கருஜயசூரிய

(கொழும்பு)

**தேசப்பற்று பற்றி மார்தட்டிக் கொண்டு மேடைகளில் உரத்த குர லில் பேசி வரும் ராஜபக்ஷ குடும்பத்தில் எத்தனை பேர் அமெரிக்க குடியுரிமை உடையவர்கள் இருக்கின்றார்கள் எனத் தெரியுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.**

உண்மையிலேயே தேசப்பற்று இருந்தால் இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க குடியுரிமை களை ராஜபக்ஷ குடும்பத்தினர் துறக்க வேண்டும்.

இலங்கை என்ற நாட்டை முதன முதலில் ஜெனீவா மனிதவுரிமை பேரவை மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கியவர் தற்போ தைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

இலங்கைக்கு பொருளாதார உதவிகளை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி ராஜபக்ச சர்வதேச சமூகத்திடம் மண்டியிட்டு வேண் டிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் நாடாளுமன்ற ஹன்சார் டிலும், குரஹான் சாட கயே என்ற ஜனாதிபதி யின் சுய சரித் திரத்திலும் பெருமிதமாக இது குறிப் பிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திலும், தென் மாகாணத் திலும் பெருமளவிலான மக்கள் ஆளும் கட்சியின் நடவடி க்கைகளுக்கு கடும் எதிர் ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

அரசாங்க எதிர்ப்பு என்பதனை விடவும், ராஜபக்ஷக்களின் ஆட்சி க்கு எதிராக மக்கள் செயற்படுகின் றனர்.

குறிப்பாக போரின் பின்னர் வழங்குவதாக தெரிவித்த எதனையும் இந்த ஆட்சியா ளர்கள் வழங்க வில்லை

இந்த அரசாங்கத்தின் நடவடிக் கைகள் நாட்டுக்கு பெரும் அபகீர்த் தியை உண்டு பண்ணியுள்ளது.

மக்கள் அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியுடன் காணப்படு கின்றனர்.

படைவீரர்கள் உயிர்த் தியாக த்துடன் போரை வென்றெடுத்தது ஒரு குடும்பத்தை காப்பாற்றவோ அல்லது போதைப் பொருள் இராச்சியமொன்றை உருவாக்கவோ அல்ல.

இந்த அரசாங்கம் பொருளாதார அபிவிரு த்தி குறித்து எந்தவிதமான கவலையையும் கொள்ளாது, சுய லாப நோக்கில் செயற்பட்டு வருகி ன்றது என கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார். (2)

## தேர்தல் சட்டங்களை மீறிய 126 பேர் கைதானார்கள்

மேல் மற்றும் தென் மாகாணசபை தேர்தலில். தேர்தல் சட்டத்தை மீறிய 126 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இதன்போது 41 வாகனங்கள் பொலிஸா ரினால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு இவற்றில் 3 வாகனங்கள் அரச அமைச்சர்களுக் குரிய வாகனங்கள் என பொலிஸார் குறிப்பிட்டு ள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இதுவரையில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 138 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள தாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள் ளது. (2)

# ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுக்கு முன்னதாக நடத்தப்பட மாட்டாது என ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவி த்துள்ளார்.

தேர்தல் பிரசாரமொன்றில் பங் கேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளாா.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதற்கு முன்னர் பதவிக் காலம் நிறை வடைய இரண்டு ஆண்டுக ளுக்கு முன்ன தாகவே தேர்தல் நடத்தப்பட்டது. எனினும், இம் முறை உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவி த்துள் ளார்.

நாட்டின் சில அரசியல்வாதிகள் நாட்டை காட்டிக் கொடுக்கும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருகின்றனர்,

மக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முடியாத தரப்பினர் சர்வதேச சக்திகளின் ஒத்துழை ப்புடன் இந்த அரசாங்கத்தை கவி ழ்க்க முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியலைத் தாண்டி குரோத உணர்வு டன் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றனர் என தெரிவித்து ள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருத் தியை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண் டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இலங்கைக்கு எதிரான ஐ.நா. பிரேரணைக்கு அமைச்சர்கள், பாரா. உறுப்பினர்கள் காரணம் மஹா நாயக்க தேரர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை யில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கு சில அமைச்சர்களே கார ணம் என இலங்கையின் முக்கிய பீடங்களின் மஹாநாயக்க தேரர்கள் கூட்டாக இணைந்து குற்றம் சுமத்தியுள்ளனர்.

அமைச்சர்கள் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்களின் நடவடிக் கைகளே இவ் வாறான நிலைமை ஏற்படுவதற்காக பிரதான காரணி என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

கண்டி அஸ்கிரி மஹாநாயக்கர், கண்டி மல்வத்து மஹாநாயக்கர், அமரபுர மஹாநா யக்கர், ராமன்ய நிக்காய மஹாநாயக்கர் ஆகியோர் இணைந்து இவ்வாறு குற்றம் சும த்தி யுள்ளனர்.

சில அமைச்சர்கள் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயற்ப டமையே இன்றைய இந்த நிலைமை க்கு காரணம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் மத நல்லிணக்கம் கிடை யாது என அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இலங்கை விவகாரங்க ளில் தேவையின்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மூக்கை நுழை க்க வேண்டியதில்லை என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பா ட்டை சில அமைச்சர்களும் இராஜதந்திரிக ளும் எதிர்க்கின்றனர் என தெரிவித்துள்ள னர்.

குறிப்பாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிரேஷ்ட இராஜ தந்திரி தயான் ஜய திலக போன்றவர்களை உதா ரணம் காட்ட முடியும் என குறிப்பிட்டுள்ள னர்.

இலங்கையின் இராஜதந்திர சேவை மிகவும் பலவீனமான முறை யில் செயற்பட்டு வரு வதாக மஹா நாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்,

மத இணக்கப்பாடு இல்லை என்ற கரு த்தை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரி வித்துள்ளனர்.

சில கத்தோலிக்க பேராயர்களும் அமை ச்சர் ரவூப் ஹக்கீமும் மத நல் லிணக்கம் தொடர்பில் வெளியிடு வரும் கருத்துக்கள் ஏற் றுக்கொள் ளக் கூடிய தல்ல என அவர்கள் கு றிப் பிட் டுள் ள னர். (2)

## துயர் பகிர்கின்றோம்

அமரர் **தம்பு நடேசு**



எமது சக ஆசிரியை செல்வி. தயாநிதி நடேசு அவர்களின் தந்தையார் அமரர் தம்பு நடேசு கடந்த 22.03.2014 அன்று சிவ பதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங் களை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6005)

**அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**(யாழ்/நாவாந்துறை றோ.க.வித்தி)**


தெய்வத்தின் திருப்பாதத்தில்!

இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

ஆசீர்வாத பெருவிழா!



இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச ஊழியத்தின் வெற்றிகரமான 36வது சுவிசேஷ மாநாடு!

மார்ச் மாதம் **28**ம் **29**ம் **30**ம் திகதிகளில்
தினமும் மாலை **5.00** மணிக்கு

**நகரசபை மைதானம் யாழ்ப்பாணத்தில்** நடைபெறும்.

(5660)

(துரையப்பா மைதானம் அருகில்)

**பிரியமானவர்களே !**
அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் செய்வினை கட்டுகள், மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள். ஆசீர்வாதத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்,
**கலாநிதி. M.R. இராஜேந்திரம்** அவர்கள். **C.V. இராஜேந்திரம்** அவர்கள்.

**36**வது வருட வேதாகம கருத்தரங்கு!
2014 மார்ச் 23 முதல் 30 வரை தினமும் காலை 8.00 - 2.00 வரை
நடைபெறும் இடம்:- **A.O.G சபை மண்டபம்,**
68/2, ராசாவின் தோட்டம், சுண்டிகுளி, யாழ்ப்பாணம். பிரவேசம் இலவசம்

For Information :- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax- 2525695, Web- Jesuslivesl k.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### தன்னை உணர்ந்த நிலை

இராம கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு ஓவியர் இருந்தாராம். அவருக்கு ஒரு ஆசை. "அதாவது இராமகிருஷ்ணரின் படத்தை வரைய வேண்டும். அதை அவரிடமே கொண்டுபோய் காட்டி அபிப்பிராயம் கேட்க வேண்டும்" இதுதான் அந்த ஓவியரின் ஆசை.

உடனே, இராமகிருஷ்ணரின் படத்தை வரைந்து முடித்தார். அதை எடுத்துக் கொண்டு போனார். இவர் போன சமயம் அங்கே இராமகிருஷ்ணர் சீடர்களுடன் உட்கார்ந்திருந்தார்.

அங்கு விவேகானந்தரும் இருந்தார். இந்த ஓவியர் கொண்டு போய் இராமகிருஷ்ணரிடம் தான் வரைந்த ஓவியத்தை காட்டினார்.

இராமகிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப் படத்தை பார்த்தார். உடனே அதன் காலைத் தொட்டார்.

குரு தேவருடைய இந்தச் செயல் சீடர்களுக்கு வியப்பை உண்டு பண்ணியதாம். சிலபேர் மனதுக்குள்ளேயே குழம்ப ஆரம்பித்து விட்டார்களாம்.

"என்ன இது... அவரே அவருடைய படத்தின் காலைத் தொடுகிறார்" என்று யோசித்தார்கள். சில பேர் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

இந்த இடத்தில் சீடர்கள் மட்டுமல்ல சீடரல்லாத பலரும் இருந்தார்கள்.

"தன்னுடைய காலைத் தானே தொடும் இவருடைய செயலைப்பற்றி என்ன நினைக்கிறது?" என்று அவர்களும் குழம்பிப் போய் நின்றார்கள். அந்தப்ப படத்தை வரைந்து அவரிடம் காட்டிய அந்த ஓவியருக்கும் அதிர்ச்சி.

இருந்தாலும் அவர் சீடரல்ல.

அதனால்கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

"என்ன இது, என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை. இது உங்களுடைய சொந்த உருவப்படம். நீங்கள் உங்கள் சொந்தக் கால்களையே தொடுகிறீர்கள். இது எங்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது" என்றார்.

இராமகிருஷ்ணரின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வழிந்ததாம். அவர் சொன்னாராம்: "இது என்னுடைய படம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது என்னுடைய படம் என்பதால் நான் இதன் காலைத் தொடவில்லை. நீ என்னுடைய சமநிலையை இந்தப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறாய். அதனால் அதன் காலைத் தொடுகிறேன். சமநிலையில் யார் இருந்தாலும்– அது என்னுடைய படமாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாருடைய படமாக இருந்தாலும் சரி படம் யாருடையதென்பது முக்கியமில்லை. இதில் எது முக்கியம் என்றால் அது தன்னை உணர்ந்த ஒரு உணர்வு நிலையின் படம். அப்படியிருக்கும் போது அதனுடைய காலை நான் தொட வேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஏன் சங்கடப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என் றாராம்.

இப்பொழுது தான் அங்கிருந்த சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் விபரம் புரிந்ததாம்.

"இதற்கு முன்பு யாரும் செய்யாததை இவர் செய்திருக்கிறார். ஆனால் அவருடைய காரணம் மிகவும் நியாயமானது." என்பதை உணர்ந்தார்களாம். இதுவரைக்கும் ஆன்மீகத்தில் சமநிலை அதாவது தன்னை உணர்ந்த நிலை பற்றி புரிந்து கொண்டோம்.

இல்லறத்தில் ஏற்படக் கூடிய சமநிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னார்களாம். "டாக்டர், என் வீட்டுக்காரருக்கு உடம்பில் ஏதோகோளாறு என்று நினைக்கின்றேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் காதில் விழாதது மாதிரி உட்கார்ந்திருக்கிறார்." என்றாராம்.

அதற்கு அந்த டாக்டர்

" அது உடம்பு கோளாறு இல்லையம்மா, அது பெரிய திறமை" என்றாராம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த அமர்வுகள் ஏப்ரலில் ஆரம்பம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமானது வடபகுதியில் செயற்பட்டு வருகின்ற ஒரு தன்னார்வ அமைப்பா கும். இது பல வருங்களாக வட பகுதிக்கு தனது சேவைகளை வழங்கி வருவதுடன் இச் சங்கத்தின் பிரதான குறிக்கோளிலொன்று விஞ்ஞான அறிவினை எமது பிரதேசத்தில் பரப்புதலும் மேம்படுத்தலுமாகும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் இவ்வாண்டு **சூழல் பாதுகாப்பிற்கான புதிய வழிகளை கண்டுபிடித்தல்** எனும் கருப்பொருளில் ஏப்ரல் மாதம்2,3,4ஆம்திகதிகளில்முறையே புதன், வியாழன், வெள்ளி வருடாந்த அமர்வினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள 01பி, உயிரியல் விரிவுரை மண்டபத்தில் நடத்தவுள்ளதாக பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இவ்வருடாந்த அமர்வானது மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய முதலாம் நாள் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவி திருமதி ச.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் தங்கப்பதக்க விருது கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியை கிரிஸ்ரினி அரியராணி ஞானதாசனுக்கு வழங்கப்படவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விரிவுரைகளும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் **சூழல் பாதுகாப்பிற்கான புதிய வழிகளைக் கண்டுபிடித்தல்** எனும் கருப்பொருளுக்கு அமைவாக கருத்துரைகள் விரிவிரையாளர்களாலும் புலமையாளர்களாலும் ஆற்றப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகளின் சமர்ப்பிப்புக்கள் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வானது எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பேராசிரியர்மா.சின்னத்தம்பிதலைமையில் நடைபெ றும்.

அதனைத்தொடர்ந்து வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு திருமதி ச.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறுவதோடு அன்றைய தினம் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டிகளுக்குரிய பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

எனவே ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்படுகிறது. (2)

# ஆவணப்படம் ஐ.நா.வில் நேற்று திரையிடப்பட்டது

ஐ.நா.வல் நேற்று இலங்கை மனிதவுரிமைகள் தொடர்பாக நடைபெற்ற துணைக் கூட்டத்தில் **இந்த நிலம் இராணுவத்துகசு சொந்தமானது** எனும் இராணுவமயமாக்கப்பட்ட இன்றைய இலங்கையை பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது.

இந்த ஆவணப்படம் இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளில் இன்றைய நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில அபகரிப்பு பற்றியும், போரின் போது இலங்கை இராணுவம் எப்படி நடந்து கொண்டது என்பதையும் மையப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படம் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் மகா பிரபாகரனால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் கிளிநொச்சியில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் வந்து ஆவணப்படத்திற்கான தகவல்களை சேகரிக்கும் போது தமிழ் மகா பிரபாகரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 55 | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 60 | 100 |
| தக்காளி | 40 | 60 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 35 | 40 |
| கரட் | 80 | 80 | 70 | 100 |
| பூசணி | 30 | 30 | 20 | 40 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 70 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 80 | 50 | 70 |
| பாகற்காய் | 120 | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 30 | 60 |
| பயற்றங்காய் | 40 | 60 | 50 | 60 |
| லீக்ஸ் | 50 | 70 | 40 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 25 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 150 | — | 200 |
| போஞ்சி | 100 | 100 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 20 | — |
| கீரை – 1 பிடி | 10 | 30 | 10 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35 | 40-45 |
| இராசவள்ளி | 90 | 80 | 80 | 80 |

## இராசி பலன்

*27.03.2014*
*(பங்குனி 13, வியாழக்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 9.03 மணிவரை*
*திருவோணம் காலை 7.16 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 5.44*
*இராகுகாலம் 1.44-3.14 மணிவரை*
*சுபநேரம் 7.44-9.14 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் தீரும், புதிய திட்டங்கள் கைகூடும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, வேலைச் சுமை கூடும், சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், நீண்ட நாளைய நெருங்கிய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**சிங்கம்** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், உற்சாகமான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** மனநிறைவு கூடும், தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பெரியவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள், வியாபார நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், ஆரோக்கியம் சீராகும், வாகன சுகமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தேவையற்ற சஞ்சலங்கள் உருவாகும், பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலன் கிடைக்கும், தேகநலனில் கவனம் தேவை, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும்.

**கும்பம்** வேலைச் சுமை அதிகரிக்கும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்; எதிர்பாராத சில செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, காரிய நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினர் அபிவிருத்திப் பணிகளில் உதயப்பெரேரா இப்படி கூறுகின்றார்



ண்டிருந்த அங்கிலிக்கன் திருச்சபையின் அவுஸ்திரேலிய பேராயர் கலாநிதி பிலிப் பிறைரர் உள்ளிட்ட குழுவினருக்கும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதிக்கும் இடையில் பலாலி இராணுவத்தலைமையகத்தில் சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

இதன்போதே கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு பேராயரிடம் தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளரின் வழி நடத்தலில் யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அபிவிருத்திப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றனர் என யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயப்பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொ

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக தொடர்ந்து வந்த போர் சூழல் முடிவடைந்து நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அபிவிருத்திப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் இந்த அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இந்தப் பணிகள் யாழ். மாவட்டம் தவிர ஏனைய பகுதிகளிலும் இராணு வத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பேராயரிடம் கட்டளைத் தளபதி எடுத்துரைத்தார்.

இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அங்கிலிக்கன் திருச்ச பையின் கொழும்பு முதல்வர் டிலோராஜ் கனகசபை,போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் பாதுகாக்க வேண்டியது அரசினது கடமை எனக் கூறியிருந்தார் என்று பலாலி படைத்தலைமையகத்தி னால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அங்கிலிகன் திருச்சபையின் யாழ்ப்பாண முதல்வர் மற்றும் கிளிநொச்சி முதல்வர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## பாவனைக்கு உதவாத பழங்கள் கைப்பற்று

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத சுமார் இரண்டரைக் கோடி பெறுமதியான பழங்கள் பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா ஒரு கொடவத்த வீதி பிரதேசத்தில் நேற்று அதிகாலை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பழுதடைந்த அப்பிள், திராட்சை , தோடம் பழம் உள்ளிட்ட 55 ஆயிரம் கிலோ கிராம் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை "இரசாயன திரவங்களிலிட்டு மீண்டும் பாவனைக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பழங்களை எடுத்துச் சென்ற வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் காசநோய் தாக்கம்; நால்வர் உயிரிழந்ததாக ஆய்வறிக்கை சுட்டிக்காட்டு



கடந்த நான்கு வருடங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு காசநோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாககாணப்படுகிறது எனவும் இவ்வருடத்தில் இதுவரை 4 பேர் காசநோய் தாக்கத்திற்குள்ளாகி உயிரிழந்துள்ளதாகவும் யாழ் பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவம் மற்றும் குடும்பநல மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்தியகலாநிதி பி.எ.டி.டினேஸ் கூஞ்ஞுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக காசநோய்தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்தார். இந்த ஆய்வறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருடத்தின் மார்ச் மாதம் வரையில் இந்த 4 பேரும் உயிரிழந்துள்ளமையானது கடந்த வருடங்களை விட அதிக எண்ணிக்கையாகும். ஏனெனில் யாழ்.மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு 14 பேரும் 2011 ஆம் ஆண்டு 11 பேரும் 2012 ஆம் ஆண்டு 13 பேரும் 2013 ஆம் ஆண்டு 14பேருமே காசநோயால் உயிரிழந்துள்ளனர்.

இவ்வருடம் ஆரம்பித்த 3 மாதங்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளமையானது யாழ். மாவட்டத்தில் காச நோய்தாக்கம் அதிகரித்திருப்பதை காட்டுகிறது. மேலும் யாழ். மாவட்டத்தின் 2010 ஆம் ஆண்டு 419 பேரும் 2011 ஆம் ஆண்டு 351 பேரும் 2012 ஆம் ஆண்டு 319 பேரும் 2013 ஆம்ஆண்டு 266 பேரும் காசநோய்த் தாக்கத்திற்குள்ளரகியிருந்தனர். வேலணை, நல்லூர் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் காசநோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது என தனது ஆய்வறிக்கையினை மேற்கோள் காட்டி அவர் சிறப்புரையாற்றியிருந்தார்.

மேலும் மாணவர்கள் மத்தியிலும் காசநோயின் ஆரம்பத் தாக்கம் அதிகரித்துள்ளது எனவும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் சுகாதார மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன், மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனாவைத்தியசாலையின் மார்பு நோய் சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி செல்வி கௌரி செல்வரட்ணம் , உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் பேராசிரியர் ந. சிவராஜா , யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதி ராஜா , வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# விவசாயிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் நேற்று முதல் விநியோகம்

2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத தத்திற்குரிய விவசாயிகளுக்கான ஓய வூதிய கொடுப்பனவுகளை நேற்று முதல் தபால் நிலையங்கள் ஊடாக விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

ஓய்வூதியம் பெறத் தகுதியான ஒரு இலட்சத்து 28 ஆயிரம் விவசா யிகளும் தாம் விண்ணப்பித்த தபா லகங்கள் ஊடாக தமது ஓய்வூதிய பணத்தை பெற முடியும்.

பெப்ரவரி மாதத்துக்கான ஓய் வூதி பணம் சுமார்17 கோடி ரூபாவை கமத்தொழில் மற்றும் கமநல காப் புறுதி சபை நேற்று முன்தினம் தபா லகங்களுக்கு அனுப்பி வைத்துள் ளது என சபையின் பணிப்பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க அறி வித்துள்ளார். (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 35 ½<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / சமுர்த்தி அலுவலர்<br>தொ.இ: B/2984 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, B.Ed, M.Ed / Master Trainer<br>தொ.இ: G/1683 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 60<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc /கடை (UK)<br>தொ.இ: B/2985 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 21.75 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, B.Ed, M.Ed / Master Trainer<br>தொ.இ: G/1684 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 7.25 சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L / Computer Asst. (கனடா)<br>தொ.இ: B/2988 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 42 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDIT / முன்னாள் விரிவுரையாளர்<br>தொ.இ: G/1687 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 67.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.Com, MBA / Asst. Manager (அமெரிக்கா)<br>தொ.இ: B/2989 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 27.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/1688 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# ஆணைக்குழுவின் விசாரணைக்கான கால எல்லை நீடிப்பு

காணாமற் போனோர் ஆணைக்குழுவின் விசாரணைக்கான காலப்பகுதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கான கால எல்லை மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி 1983 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தை உள்ளடக்கியதாக விசாரணைகள் இடம்பெறவுள்ளன. முன்னதாக 1990 வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேசத்தில் முன்னறிவித்தலின்றி மின்தடை

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் முன்னறிவித்தல் எதுவுமின்றி தடைப்படுவதாக பாவனையாளர்கள் கவலை




தெரிவிக்கின்றனர்.

எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் மணித்தியால கணக்காக மின்சாரம் தடைப்படுவதால் பலரும் பல்வேறு வகையான பாதிப்புக்களைஎதிர்கொள்வதாக குறிப்பிடுகின்றனர்.

பகல், இரவு என்று பாராது மின்சாரம் தடைப்படுவதால் மின்சார உபகரணங்கள் செயலிழந்து போகும் நிலை காணப்படுகிறது.

நேற்றையதினம் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி காலை 9 மணியில் இருந்து 10 மணி வரை மின்சாரம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் சீரான மின்சாரத்தை வழங்கவேண்டும் என மின் பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-10)

நன்றி–மிரர்



## நல்லூர் பிரதேச சபையினர்

# பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு தீர்வினை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்



நல்லூர் பிரதேச சபையினர் பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கு உரிய தீர்வினை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச சபைகளின் கீழுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை 3 பிரதேச சபைகளின் பொதுச் சுகாதார பரிசோதகர்களைசுகாதாரத்திணைக்களத் தின் கீழ் இடமாற்றம் செய்யுமாறு வடமாகாண ஆளு நர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அனுமதியுள்ள வலி.தெற்கு பிரதேச சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் மட்டும் அவரது சேவைக்காலம் முடியும் வரையிலும் பிரதேச சபையின் கீழ் இருக்கலாம் எனவும் இருந்தும் அவர் ஓய்வு பெற்ற பின்னர் புதி தாக நியமனம் பெறும் பொதுச் சுகாதார பரிசோதகர் சுகாதார திணைக்களத்தின் கீழே கடமையாற்றுவார் என ஆளுநர் தெரிவித்திருந்தார்.

யாழ்.மாவட்டத்தின் நல்லூர், சங்கானை (வலி.தென்மேற்கு), உடுவில் (வலி.தெற்கு) தெல்லிப்பழை (வலி. வடக்கு) ஆகிய 4 பிரதேச சபைகளின் கீழ் கடமையாற்றி வரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் தமக்கு இடையூறுகள் ஏற்படுவதாகவும் அவர் தங்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுப்பதாகவும் கூறி அவர்களை சுகாதாரத் திணைக்களங்களின் கீழ் மாற்றும் படி யாழ்.மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்தியதிகாரி பிரவுகளையும் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள் கடந்த 14 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஆளுநருடனான கலந்துரையாடலில் அரச வைத்தியதிகாரிகள் சங்கத்தின் யாழ். பிராந்திய கிளையின்தலைவர்,செயலாளர்,வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பா ளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதக ர்களை சுகாதாரத் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து 15 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச செயலகங்களின் கீழுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் மாறி அங்குதங்கள் கையொப்பங்களை இட்டு பணிகளை தொடரும் படி ஆளுநா உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு இதுவரையிலும் பிரதேச சபை யினால் வழங்கப்பட்டு வந்த சம்பளக் கொடுப்பனவை நிறுத்துமாறு குறித்த 3 பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் ஆளுநர் உத்தரவிட்டார்.

இவ்வாறு இடமாற்றம் செய்வதற்கு குறித்த பிரதேச் சபைகளின் தவிசாளர்கள் தங்கள் எதிர்ப்புகளை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தாம் பிரதேச சபைகளிற்கு கீழ்தான் பணியாற்றுவோம் என கூறி பொது சுகாதார பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலேயே அவர்களிற்கு ஆதரவாக நல்லூர் பிரதேச சபையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.(2-4-6)

# வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் உள்ள மின் விளக்குகள் பல நீண்ட காலமாக செயலிழந்து காணப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச சபைக்கு அப்பகுதி மக்கள் கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தியும் நீண்ட காலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வீதிவிளக்குகளை வெகு விரைவில் தமது பயணத்திற்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் பயணிப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-28)

# ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும்

(மானிப்பாய்)

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இவ்வாண்டிற்கான பரிசில் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் இலங்கை பொது நூலகர் சொ. ஹரிசங்கர் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சி.திருவாகரன், சிறப்பு விருந்தினர்களாக யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன், சுன்னாகம் வலி.தெற்கு பிரதேச சபை பிரதம நூலகர் திருமதி இரத்தினேஸ்வரி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தாங்கியின் பெயர்ப்பலகை திரை நீக்கம், மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (2-23)

# காலநிலை உஷ்ணத்தை அடுத்து வெப்ப நோய்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி பகுதியில் பலர் வெப்ப நோய்க்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பத்தினால் பல்வேறு வகையான வெப்ப நோய்கள் பரவி வருகின்றன.

இந் நோய்த்தாக்கம் சிறு குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை காணப்படுகின்றது.

குறிப்பாக காய்ச்சல், சின்னமுத்து, கொப்பளிப்பான் ஆகியவற்றின் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

சில குடும்பங்களில் உள்ளோர் காய்ச்சல் நோய்க்கு இலக்காகி வருகின்றமை... தும் குறிப்பிடத்தக்கது. (2-20)

# சைக்கிள்களை பாதுகாப்பு தரிப்பிடங்களில் நிறுத்துங்கள்

## பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுரை

யாழ்.சுன்னாகம் சந்தைக்கு வருபவர்களின் 09 சைக்கிள்கள் கடந்த வாரம் களவு போயுள்ளதாக சைக்கிளை பறிகொடுத்தவர்கள் முறைப்பாடு செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சந்தைப் பகுதியில் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிளே இவ்வாறு களவு போயுள்ளதென்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

பொது மக்கள் தங்களது சைக்கிள்களை உரிய தரிப்பிடங்களில் நிறுத்தாது தாங்கள் விரும்பிய இடங்களில் விட்டுச் செல்வதாலேயே இக்களவுகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்நிலையில் பொதுமக்கள் தங்களது சைக்கிள்களை உரிய தரிப்பிடத்தில் விட்டு சந்தைக்குச் செல்லுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவு வாய்க்கால் புனரமைக்கப்படாமையால் கிராமங்களினுள் வெள்ளம் புகும் அவலநிலை

## மழைகாலம் கடந்துள்ள நிலையில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்க முடியும்-மக்கள் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் கிராமத்தின் தெற்குப் பகுதியிலுள்ள பிரதான கழிவு வாய்க்காலைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் ஏ-9 வீதியின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள ஜெயந்தி நகரின் ஒருபகுதி, உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு, வடக்கு, சிவநகர் ஆகிய கிராமங்களுக்கு தெற்குப் பகுதிலேயே இக்கழிவு வாய்க்கால் அமைந்துள்ளது.

சுந்தன்குளம், அம்பாள்குளம், புதுக்குளம், புதுமுறிப்புக்குளம் போன்ற குளங்களின் கழிவு நீர் செல்கின்ற பிரதான கழிவு வாய்க்காலாக குறித்த வாய்க்கால் அமைந்துள்ளது.

இந் நிலையில் இக் கழிவு வாய்க்காலைச் சூழ பற்றைகளும் மண் மேடுகளும் பள்ளங்களும் காணப்படுகின்றன.

அத்தோடு பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமையினால் வாய்க்காலின் அணைப் பகுதிகளில் பல இடங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் ஒவ்வொரு வருடமும் மழை காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கிராமங்களுக்குள் செல்லும் அவல நிலை தோன்றியுள்ளது.

தொடர்ச்சியாக இக் கழிவு வாய்க்காலை அண்டியுள்ள மக்கள் வெள்ளப் பெருக்கினைச் சந்தித்து வருகின்றனர்.

மழைகாலங்களில் கழிவு வாய்க்கால் நீர் உடைப்பெடுத்து குடிமனைகளுக்குள் புகுவதனால் வீதிகளும் சேதமடைந்துள்ளன.

இந் நிலையில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள உருத்திரபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வீதி, வாய்க்கால் புனரமைக்கப்படாவிடின் எதிர்வரும் பருவ மழையினால் சேதமடையலாம் என கிராம மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

இக் கழிவு வாய்க்காலினால் வருடாவருடம் நெருக்கடியைச் சந்தித்துவரும் கிராம மக்கள் வாய்க்காலின் ஒரு பகுதியான இரத்தினம் பண்ணைப் பகுதியின் புனரமைப்பு வேலைகளை மேற்பார்வையிட வருகை தந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமரவீரவிடம் கழிவு வாய்க்காலினைப் புனரமைக்குமாறு வலியுறுத்தினர்.

இதனையடுத்து புனரமைப்பு வேலைகளுக்கான மதிப்பீடுகளை அனர்த்த முகாமைத்துவ பிரிவைச் சேர்ந்த பல பொறியியலாளர்கள் வந்து மேற்கொண்டனர்.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் இக்கழிவு வாய்க்கால் புனரமைப்பிற்காக 38 மில்லியன் செலவாகும் எனவும் இதற்கான நிதியுதவியை ஜப்பான் நாட்டின் நிறுவனத்தினூடாகப் பெற்று புனரமைப்பு மேற்கொள்ளப்படுமென வும் பரவலாக கருத்து வெளியிட்ட நிலையிலும் இதுவரை எவ்வித வேலைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

தற்போது மழை இன்மையானது இக்கழிவுவாய்க்காலின்பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சாதகமாக இருக்குமென சுட்டிக்காட்டியுள்ள மக்கள் இவ் வருடமாவது வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளாமலிருக்க குறித்த கழிவு வாய்க்காலினைப் புனரமைத்து உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-254)




## நேரியகுளம் வீதியை புனரமையுங்கள் மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் ஊடாக நேரியகுளம் செல்லும் வீதி புனரமைக்கப்படாமையினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நெளுக்குளம் ஊடாக நேரியகுளம் செல்லும் இப் பிரதான வீதியை நெளுக்குளம், பாரதிபுரம், விநாயகபுரம், ராசேந்திரம் குளம், சூடுவெந்தபுலவு, பாவற்குளம், உலுக்குளம், வீரபுரம் முதலான பல கிராமங்கள் பயன்படுத்திவருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டோர் இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-250)




வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தின் சுமங்கலித் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது மரக்கறிகள், பழங்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டுள்ள அம்மன் சிலையுடன் பூசகர் மற்றும் ஆலயத்தினர் நிற்பதுடன் இடம்பெற்ற கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமையுங்கள்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைத்தும் பலன் கிடைக்கவில்லையென மக்கள் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி மாதிரிக் கிராமங்களிலுள்ள 350 இற்கும் மேற்பட்ட மக்களுக்கான காணிகள் உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ளதனால் இவர்களை 2012ஆம் ஆண்டு கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமம் என்ற குடியேற்றத் திட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டனர்.

இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லாத நிலையில் 8 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கே மக்கள் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறாக மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் மக்கள் [illegible] ந்து சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 3 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுதமது சொந்தக் காணிகளையும் இழந்த நிலையிலுள்ள இக்கிராம மக்கள் வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைத்தும் இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவில்லை என கவலை கொள்கின்றனர்.

ஆகவே, மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க உரியவர்கள் முன்வரவேண்டுமென கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (2-9-267)

## குடியியல் ஆவணங்கள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் நடமாடும் சேவையும்

குடியியல் ஆவணங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடமாடும் சேவையும் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி இன்று வியாழக்கிழமை அம்பகாமம், ஒலுமடு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு ஒலுமடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கூழாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு கூழாமுறிப்பு பொதுநோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 3ஆம் திகதி மணவாளன் பட்டமுறிப்பு தச்சடம்ப ஆகிய கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு மணவாளன் பட்டமுறிப்பு பொதுநோக்கு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி புளியங்குளம், கருவேலங்கண்டல் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கு கருவேலங்கண்டல் பொதுநோக்கு மண்டபத்திலும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கற்சிலைமடு, கணேசபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்களுக்கு கற்சிலைமடு பொதுநோக்கு மண்டபத்திலும் இடம் பெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையினூடாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களின் பிரதிகள், பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் மாற்றம், திருத்தம் தொடர்பான பிரச்சினைகள், காலங் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, உத்தேச வயதுச் சான்றிதழ் என்பனவற்றை பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் அடுத்து வரும் மூன்று மாதங்களினுள் இந்நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாகவும் அவற்றுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

760



## நரக வாசம்!

...அந்தீவில் எட்டு பிசாசுகள் இருந்தன. அவற்றோடும் ஒருவாரகாலம் சுகமாக இருந்துவிட்டு அவன் தன் படகில் புறப்பட்டுச் சென்றான்.

அடுத்த தீவில் பதினாறு பிசாசுகளுடனும் அதற்கு அடுத்த தீவில் முப்பத்திரெண்டு பிசாசுகளுடனும் ஒவ்வொரு வாரம் சுகமாகக் கழித்துவிட்டு வேறொரு தீவை அடைந்தான்.

அந்தத் தீவில் ஒரு பெரிய நகரம் தென்பட்டது. அதைச் சுற்றிலும் பெரிய மதில் சுவரும் நான்கு தலை வாசல்களும் இருந்தன. அது உண்மையில் நரக லோகம். ஆனால் மித்திரவிந்தன் கண்களுக்கு அது அழகிய நகரமாகத் தோன்றியது. அதற்குள் அவன் சென்றான்.

நகரில் ஒரு வீதியில் ஒரு மனிதன் நிற்க அவன் தலை மீது ஒரு பெரிய சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. அது கனமாயும். அதன் ஆரக்கால்கள் வாள் போல் கூராகவும் இருந்தன. சக்கரம் அவனது தலைக்குள் நன்கு அழுந்திச் சுழன்றதால் ஆரக்கால்கள் தலை மீது பட்டு இரத்தம் வடியச் செய்து கொண்டிருந்தன. அவன் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்ததால் அவனால் சிறிது கூட ஒரு இடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு அசைய முடியவில்லை. வலியால் அவன் மிகவும் பலமாக அலறிக் கொண்டிருந்தான்.

இதை எல்லாம் கண்டும் மித்திரவிந்தன் அவனை அந்நகரத்தின் மன்னன் என நினைத்தான். அவன் தலை மீது சுழன்ற சக்கரம் கிரீடம் போல அவன் கண்களுக்குப் பட்டது. அவனைப் பிணைத்திருந்த சங்கிலிகள் தங்க ஆபரணங்களாக அவனுக்குத் தோன்றின.

தனக்கு அது கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்றும் தானும் அந்த நாட்டின் மன்னனாகி விடலாம் என்றும் நினைத்தான்.

இவ்வாறு நினைத்துக்கொண்டு மித்திரவிந்தன் அந்த மனிதனை அணுகி "ஐயா! உங்கள் தலை மீதுள்ள கிரீடத்தை நான் சற்று நேரம் அணிந்திருக்க அனுமதிப்பீர்களா?" என்று கேட்டான்.

அவனோ "இது கிரீடமல்ல, சக்கரம்" என்று கூறவே, மித்திரவிந்தன் "எனக்குக் கொடுக்க இஷ்டப்படாமல் இப்படி ஏதோ ஒரு சாக்கு சொல்கிறீர்களே" என்றான். இதைக் கேட்ட அம்மனிதன் தன் பாவத் திற்கு ஒரு முடிபு வந்துவிட்டதென எண்ணி "ஆகா, கொடுக்கிறேன்" எனக் கூறி அந்த சக்கரத்தை எடுத்து மித்திரவிந்தனின் தலை மீது வைத்து விட்டுப்போய் விட்டான். தாயை அடித்தவர்களுக்கு நரகத்தில் அப்படி ஒரு தண்டனை என மித்திரவிந்தன் அறிந்திருக்கவில்லைதான். சக்கரம் அவனது தலை மீது வைக்கப்பட்ட பின்புதான் மித்திரவிந்தனுக்கு அதன் வலியும் உண்மையும் புரிந்தது.

இந்திரனாக இருந்த போதிசத்வர் ஒருமுறை நரகலோகத்தைக் காண வந்தார். அவர் மித்திரவிந்தன் இருந்த இடத்திற்கு வந்தபோது அவன் அவரிடம் "என் மீது இரக்கம் காட்டுங்கள். இந்தச் சக்கரத்திடம் இருந்து எப்போது நான் விடுதலை பெறுவேன்?" என்று கேட்டான்.

அப்போது போதிசத்வர் "உன்னிடம் எவ்வளவோ பணம் இருந்தும் மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்றே ஆசைப்பட்டாய். பிசாசுகளுடன் வசித்தாய். மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய உயர் நெறிகளை ஏற்கவில்லை. இதனை நீயே கேட்டு வாங்கிக் கொண்டாய். எனவே உன் ஆயுட்காலம் முடியும் வரை உனக்கு இந்த நரகவாசம்தான்" எனக் கூறினார்.

மித்திரவிந்தனும் கண்ணீர் வடித்துத் தன் விதியை நொந்தவாறே நரகத்தில் வசிக்கலானான்.

(முற்றும்)



## 27 03.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢1513 - நாடுகாண் பயணி ஜுவான் பொன்ஸ் டி லெயோன் வட அமெரிகாவைக் (புளோரிடா) கண்ணுற்றார்.
- ➢1625 - முதலாம் சார்ல்ஸ் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, மற்றும் அயர்லாந்து மன்னராக முடி சூடினார். அத்துடன் பிரான்ஸ் மன்னனாகவும் தன்னை அறிவித்தார்.
- ➢1854 - கிரீமியாப் போர்: ஐக்கிய இராச்சியம் ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- ➢1918 - மல்தோவா, பெசராபியா ஆகியன ருமேனியாவுடன் இணைந்தன.
- ➢1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் அச்சு அணிஆதரவு அரசாங்கம் யூகொஸ்லாவிய வான்படையினரால் கவிழ்க்கப்பட்டது.
- ➢1958 - நிக்கிட்டா குருஷேவ் சோவியத் பிரதமர் ஆனார்.
- ➢1968 - விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விமான விபத்தொன்றில் இறந்தார்.
- ➢1969 - நாசாவின் மரைனர் 7 என்ற ஆளில்லா தானியங்கி விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- ➢1970 - கொன்கோர்ட் விமானம் தனது முதலாவது சுப்பர்சோனிக் பயணத்தை மேற்கொண்டது.
- ➢1993 - ஜியாங் செமின் மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதியானார்.

### பிறப்புக்கள்

- ➢1845 - வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1923)
- ➢1847 - ஒட்டோ வல்லாச், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1931)
- ➢1892 - சுவாமி விபுலானந்தர், யாழ் நூல் எழுதியவர் (இ. 1947)
- ➢1901 - எய்சாக்கு சாட்டோ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியப் பிரதமர் (இ. 1975)
- ➢1942 - ஜோன் சல்ஸ்டன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய அறிவியலாளர்
- ➢1886 - லுட்விக் மீஸ் வான் டெர்ரோ, ஜேர்மனிய கட்டடக் கலைஞர் (இ. 1969)

### இறப்புக்கள்

- ➢1898 - சர் சையது அகமது கான், இந்திய அறிஞர் (பி. 1817)
- ➢1927 - [illegible] நோபல் பரிசு பெற்றவர் (பி. [illegible])
- ➢1968 - யூரி ககாரின், விண்வெளிவீரர் (பி. 1934)



### சுவாமி விபுலானந்தர்

சுவாமி விபுலானந்தர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 27 ஆம் திகதி சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்.

சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனன்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக "யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்" என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

மனத்தை ஈர்ந்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி, இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரிய பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார் மயில்வாகனன்.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலானந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத் துறை எவ்வழியில் செல்லவேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.

உடல் நலக்குறைவு ஏற்பட்டு 1947 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி சுவாமி விபுலானந்தர் இறைவனடி சேர்ந்தார்.

அவரது உடல், அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

ஈழத்து மக்களிற்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கை அரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரை சேர்த்துள்ளது. இத்துடன் நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ்மொழி தினம் இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

ஆகா! பார்க்கும்போது மனதில் ஆனந்தம் ஏற்படுவதால்தான் ஆனந்த வல்லி என்று பெயர் கொண்டனளோ?

சித்தர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

ஏறத்தாழ சதுரகிரி யாத்திரையை முடித்துவிட்டீர்கள். அதிகாலையிலேயே எழுந்து போய்விடுவேன். ஆகவே இப்போதே உத்தரவு வாங்கிக் கொள்கிறேன் என்றார் செல்வராஜ் சுவாமிகள்.

நாளை காலை கீழே இறங்குவதா! என்னுடைய பட்டியலைப் பார்த்தேன். இன்னும் பார்க்க வேண்டிய இடங்கள் சில இருந்தன. சரி காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று படுத்துவிட்டேன்.

நள்ளிரவு வயிற்றை லேசாகக் புரட்டவே வெளியே செல்ல எழுந்தேன். கையிலிருக்கும் அலைபேசி மணி பன்னிரண்டைக் காட்டியது. இந்த அகால நேரத்தில் வெளியே செல்லக் கூடாது தான். ஆனால் இதை உடல் கேட்க வேண்டுமே? வேறு வழியில்லாமல் டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன்.

வெளியே பூசைக்கான மணியோசை, இடையிடையே செகண்டி ஓசை, சங்கொலி, மகாலிங்கர் சன்னதியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது. சரிதான் அர்த்தஜாம பூஜை போலிருக்கிறது.

இந்த இருட்டில் இத்தனை படிக் கட்டுகளையும் கடந்து கீழிறங்கி மறுபடியும் மேலேறுவதற்குக் கஷ்டமாகத் தான் இருக்கிறது. வேறு வழி....?

சுந்தரமூர்த்தி சன்னதி வரை வந்து விட்டேன். இப்போது இன்னும் அதிகமாக அந்த மணியோசை கேட்கிறது.

மணியோசையுடன் சுந்தரமூர்த்தி சன்னதியில் பக்தர்களின் பஜனை பாடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அமாவாசை இரவில் அர்த்தஜாம பஜனை செய்வது இங்கு வழக்கம் போலும். அந்தப் பஜனை செய்யும் அழகைக் காண மேலும் படிக்கட்டுகளில் இறங்குகிறேன்.



சுந்தர மகாலிங்கம்

மலையேறும்போது இருந்த வெளிச்சத்தைவிட சுந்தரலிங்கம் சன்னதி இன்னும் வெளிச்சமாகக் காணப்பட்டது. காவி உடை தரித்த சந்நியாசிகள் பலர் சுந்தரலிங்கம் சன்னதியின் முன் அமர்ந்து பஜனைப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர்.

கடும் பனி பொழியும் இந்த நள்ளிரவு குளிரைக்கூட பொருட்படுத்தாமல் இப்படி வெட்ட வெளியில் அமர்ந்து பஜனை செய்யும் அவர்களைப் பார்க்க வியப்பாயிருந்தது. உணர்ச்சிகளைத் துறந்தவர் துறவி என்பதால் இந்தக் குளிரையும் தாங்கிக் கொண்டனரோ! அவர்கள் மேனியில் அணிந்திருந்த திருநீற்றின் கமகம அத்தர், ஜவ்வாது வாசனை மனதை மயக்கியது. இன்னும் சற்று அருகில் சென்றேன். இப்போது ஒவ்வொருவர் முகமும் தெளிவாகத் தெரிந்தது.

## ஆன்மீகம் 74

நடுவில் ஒரு சந்நியாசி பாட்டு பாட, அருகிலிருந்த மற்றொரு சந்நியாசி டோலக் தட்ட, சுற்றியிருந்த மீதி சந்நியாசிகள் கோரசாக அந்தப் ப்பாடலைத் தொடர்ந்தனர்.

பாட்டு கேட்க ஆனந்தமாயிருந்தாலும், என்ன பாட்டு என்பது சட்டென விளங்கவில்லை. சித்தர் பாட்டு பாணியில் பாடிக் கொண்டிருந்தனர். நடு நடுவே அரோகரா கோஷமும் இட்டார்கள்.

எனக்கு உடல் உபாதையும் தூக்கமும் போன இடம் தெரியவில்லை. கருவறையில் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் அலங்காரம் வெகு சிறப்பாயிருந்தது. சந்தனத்தால் முகம் செய்து கண்மலர் சாத்தி குங்குமத்தால் உதடுகள் வரைந்து நிஜமாக நம்மை குறு குறுவென உற்றுப் பார்ப்பதுபோல் ஒரு முக பாவத்துடன் அலங்காரம் செய்திருந்தனர்.

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், உணர்ச்சி பொங்க பஜனை பாடிக் கொண்டிருந்த சந்நியாசிகள் முகங்களில் அதற்கான பாவங்கள் ஏதும் காணப்படவில்லை.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



## 86 நாடோடி மன்னர் நாடாளும் மன்னர்

செம்மல் நாடாளும் மன்னராக இருந்தாலும் அவரது நாட்டமெல்லாம் திரையில்தான் இருந்தது. இரண்டாவது தடவை அமெரிக்கா போய் வந்து, தான் அங்கு பார்த்த நயாகரா நீர்வீழ்ச்சியைப் பற்றி மிகவும் சிரமப் படச் சொன்னார். "அங்கு பூமியிலேயே வானவில் தோன்றும். தண்ணீர் துமிகள் (துமி என்பது ஒரு துளியில் ஆயிரத்தில் ஒரு பாகம்) மேகம் போலிருக்கும். அதில் சூரியகதிர்கள் பட்டதும் வானவில் தோற்றம் வரும். அங்கு படம் எடுக்கணும்னு எனக்கு ஆசை வந்தது" என்றார்.

"எடுக்கலாம்" என்றேன்.

அப்போது தனது சிறுவயதில் நடந்த சம்பவங்களை வைத்து எழுதிய ரத்தத்தின் ரத்தம், காணக்கண்கோடி வேண்டும் என்ற கதைகளை துவக்கியும் இப்ப நான் வந்து நடிக்க முடியாது. நான் நடிக்காமலேயே என் வரலாற்றை ஒரு படமாக்கணும்... முடியுமா? என்று கேட்டார்.

அப்போது அமைச்சர் வி.வி.சுவாமி நாதன் அவர்களும் இருந்தார். நான் சற்று யோசித்து "முடியும்... எப்படி என்பதை நாளை வந்து சொல்கிறேன்" என்றேன்.

என்னிடம் சொல்ல வேண்டாம் வி.வி.எஸ் கிட்டயே சொல்லும். இதை செய்தித்துறையே எடுக்கட்டும் என்றார்.

இதற்காக செம்மலின் 72 படங்களிலிருந்து தேவையான துண்டுக் காட்சிகளை இணைத்தேன். அதற்கு தக்கபடி வர்ணனை எழுதி, இன்னும் சிலதை புதிதாக படமெடுத்து, இணைத்தேன். பிறகு முழு படமாக ஒரு கதையமைப்பு எழுதினேன். இதற்கு பக்கபலமாக இருந்து உதவியவர்கள் பிலிம் நியூஸ் ஆனந்தனும் எலிகண்ட் பப்ளிஸிட்ரி கமலநாதன் அவர்களும்.

திரைப்படத்துக்கு தக்கபடி கதையமைத்து எழுதிக்கொண்டு போய் அமைச்சர் வி.வி.எஸ். அவர்களிடம் கொடுத்தேன். அவர் செம்மலிடம் கொடுத்தார்.



அப்போதும் செம்மல் அதைப் பார்க்காமலே "ரவீந்திரன்தானே எழுதியிருக்கார். எல்லாம் சரியாயிருக்கும். படம் எடுங்க. பாத்துக்குறேன்" என்றாராம். அமைச்சர் வந்து என்னிடம் சொல்லி வியந்தார்.

அந்தப் படத்துக்கு இலங்கை சென்றும் படமெடுக்க வேண்டும். செம்மல் பிறந்த கண்டி, இருந்த ஊர், திரும்பி வந்து இருந்த ஊர் இவற்றை படமெடுக்க உத்தரவு கேட்டு போனேன்.

உதவியாளர் பிச்சாண்டி, "மேலே டாக்டர் இருக்கிறார். கேட்டு வந்து சொல்றேன்" என்று மேலே போய் வந்தார்.

"என் வரலாற்றைப் படமெடுக்க பாரதிராஜா, பாக்யராஜ், கோவை தம்பி, மணியன் எல்லோரும் அனுமதி கேட்டார்கள். கொடுக்கலே... ரவீந்திரனுக்கு மட்டும் தர்றேன். நல்லா எடுக்கட்டும்" என்று அந்த உதவியாளர் மூலமே சொல்லி அனுப்பினார்.

அப்படத்திற்கு அப்போது வந்த செலவு மூன்று இலட்சம். படப்பிடிப்பு கருவிகள், எடிட்டிங் எல்லாம் அரசு நிறுவனம் தரும். அதற்காக ஒரு பட்ஜெட் தயாரித்துக் கொடுத்தோம். நிதி இலாகாவுக்கு அனுப்பப்பட்டது. வழக்கம்போல் அந்த கோப்பும் குறட்டை விட ஆரம்பித்து விட்டது. சில நாட்கள் பொறுத்து அமைச்சர் எஸ்.வி.எஸ். அவர்களிடம் கேட்டேன்.

"என்ன செய்ய? நிதி அமைச்சர் பணம் பாஸ் பண்ணலே.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் க.பொ.த(உ/த) வகுப்புக்களில் தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகமும் நடைமுறைச்சவால்களும்

**இக்கட்டுரை செப்டெம்பர் 2013 அகவிழி சஞ்சிகையிலும் யா/ நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு மலரான ''அரசடியாள்'' மலரிலும் ஏற்கனவே பிரசுரமானது.**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இத்துறைகளை க.பொ.த. உயர்தரத்தில் பயில்வதனூடாக மாணவர்கள் செயன்முறை அறிவைப் பெறுவதுடன் அவர்கள் சுலபமாக தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என மொறட்டுவப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வித்தியஜோதி பேராசிரியர் தயானந்த விஜயசேகர குறிப்பிடுகின்றார்.

✷ இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்காக தொழில்நுட்பத் தையும் பொருத்தமான மென்திறன்களையும் கொண்ட சவால்களை எதிர்நோக்கக்கூடிய இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றமை.

✷ எமது பட்டதாரிகளின் மத்தியில் காணப்படும் தேர்ச்சியின்மை அல்லது தேர்ச்சிக் குறைவு தமது தொழிலை சிறப்பாகச் செய்வதற்குத் தடையாக அமைந்துள்ளது.

✷ தொழிற் சந்தையில் அதிகரித்துவரும் கேள்விக்குப் பொருத்தமான தொழிற்றிறனுள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை.

**தொழில்நுட்ப பாடத்துறையின் பாடச்சேர்மானங்கள்.**

பிரேரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்த் துறையானது, உயர்தர வகுப்பில் ஒரு தனியான பிரிவாக, தெளிவான வகையில் அடையாளங்காணப்படும். அதுதேவையான பாடநெறிகளுடன் கூடிய பரந்த தொழில்நுட்பக்




கற்கைப் பரப்பினை உள்ளடக்கியுள்ளது. கல்வியமைச்சிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் தேசிய கல்வி நிறுவகத்திலும் நடை பெற்ற கலந்துரையாடல்களின் பேறாக பொறியியல் தொழில் நுட்பவியல் (Enginee rig Technology) மற்றும் உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio systems Technology) எனும் இரண்டு பரந்த தொழில்நுட்பப்பரப்புக்கள் இனங்காணப்பட்டன. இவை இரண்டிலும் ஏதாவதொரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்யலாம்.

இந்தச் சேர்மானத்தில் இரண்டாவது பாடமான தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் (Science for Technology) என்பது விஞ்ஞானம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பான அடிப்படை அறிவை வழங்கி தெரிவு செய்த தொழில்நுட்ப பாட நெறியைக் கற்க உதவியாக அமையும். இச்சேர்மானத்தின் மூன்றாவது பாடம், ஏற்கனவே க.பொ.த. உயர்தரத்திற்கான பாடங்களின் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும். தொழில்நுட்பக் கற்கைத் துறையில் அடங்கும் பாடங்கள் வருமாறு,

1. பொறியியற் தொழில்நுட்பவியல்/ உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பவியல் (ஏதாவதொன்று)

2. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

3. பின்வரும் 10 பாடங்களில் ஒன்று

பொருளியல், புவியியல், மனைப் பொருளியல், ஆங்கிலம், தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், சித்திரம், வணிகக் கல்வி, விவசாய விஞ்ஞானம், கணக்கியல்

**பிரதான தொழில்நுட்பாடங்கள் உள்ளடக்கியுள்ள விடயதானங்கள்.**

| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | பொறியியற் தொழில்நுட்பவியல் |
|---|---|
| தரம் 12 | தரம் 12 |
| 01. உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்தின் அறிமுகம் | 1. பொறியியல் தொழில்நுட்பத்திற்கான அறிமுகம் |
| 02. நீரியியலும் காலநிலையியலும் | 2. அடிப்படை மோட்டார் வாகன தொழில்நுட்பம் |
| 03. மண்ணும் நீரும் | 3.அடிப்படை மின் தொழில்நுட்பம்/ வீட்டு மின்சுற்று |
| 04.அளவையும் மட்டப்படுத்தலும் | 4.அடிப்படை கட்டுமான தொழில் நுட்பம் |
| 05. தாவர இனப்பெருக்கத் தொழில் நுட்பம் | 5.அடிப்படை உற்பத்தி தொழில் நுட்பம்/ பொருத்தும் தொழில்நுட்பம் |
| 06. உணவுப் பாதுகாப்பும் சட்டவரையறைகளும் | 6. பொறியியல் வரைபுகள் |
| 07. அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம் | 7.அலகுகளும் அளவீடுகளும் |
| 08. உணவுகளைப் பொதியிடலும் பெயர்ச்சுட்டியிடலும் | 8.இயக்க மற்றும் வலு ஊடுகடத்தும் மூலங்கள் |
| 09. உணவுச் சேர்மானங்கள் | 9.தொழில்நுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும் |
| 10. அடிப்படை இலத்திரனியல் | தரம் 13 |
| 11. நீரின் தரம் | 1. மின் இயந்திரங்களும் வலு முறைமைகளும் |
| 12. நீருயர்த்தல் | 2. அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும் |
| 13.நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் | 3.வீட்டு நீர் விநியோகமும் சுக நல வசதிகளும் |
| 14. பீடை முகாமைத்துவம் | 4. திரவ இயந்திரங்கள் (பம்பி, சுழலி) |
| 15. செயற்றிட்டங்கள் | 5. பொறியியல் தரங்களும் தரக்கட்டுப்பாட்டு முறைமைகளும் |
| தரம் 13 | 6.அளத்தல் |
| 16. கால்நடை வளர்ப்பு | 7.மதிப்பீடும் B.O.Q. வை தயாரித்தலும் |
| 17.உணவு நற்காப்புத் தொழில்நுட்பம் | 8.முயற்சியாண்மையும் முகாமைத்துவமும். |
| 18.பண்ணைக் கட்டமைப்புகள் | |
| 19. ஆளுமை நிபந்தனைகளின் கீழான பயிர்ச்செய்கை | |
| 20மலர்ச்செய்கையும் தரையலங்கரிப்பும் | |
| 21.பண்ணைப் பொறிமுறைப்படுத்துகை | |
| 22.மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும் | |
| 23.காடுகளும் வன உற்பத்திகளும் | |
| 24.தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும் | |
| 25.முயற்சியாண்மை | |

**தொழில்நுட்பத்துறையை கற்பதற்கான தகைமை**

இத்தொழில்நுட்பத்துறைக்கான ஆகக் குறைந்த தகமைகளாக பின்வருவன அமைந்துள்ளன.

✷ க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தாய்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

✷ மேற்கூறப்பட்டவற்றுள் ஏதாவது மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் உயிரியல்முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு அறிமுறைப் பரீட்சைக்காக 75% புள்ளிகளும், செயன்முறைப் பரீட்சைக்காக 25% புள்ளிகளும் வழங்கப்படும். செயன்முறைப் பரீட்சையானது தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அல்லது தொழில்நுட்ப கற்கை அலகுகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டக் [illegible] பாடசாலைகளிலேயே நடத்தப்படும் எனவும் அதற்கான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்படும் எனவும் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறுதி மதிப்பீடானது பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் எனவும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மாதிரி வினாத்தாள்கள் பிரசுரிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்**

தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுடன் தேசிய கல்வி ஆணைக்குழுவும் இப்பாடத்துறை நடைமுறைப்படுத்தலில் தொடர்ந்து இணைந்து பணியாற்றி வருகின்றன. பாடநூல்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள் கல்வியியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் ஏனைய வளவாளர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்நுட்பப் பாடங்களை பயிற்றுவிப்பதற்காக 300 ஆசிரியர்கள் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 700 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்களை வளவாளர்களாக பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இவர்களுக்கு மேலதிக வேதனமாக பத்தாயிரம் ரூபா வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான ஆரம்பகட்ட அறிவூட்டல்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் பாடநூல்கள், பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பனவும் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கள்**

இந்தப் பாடப்பிரிவைப் பயிலும் மாணவர்கள் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் உயர் அடைவுகளைப் பெறுவார்களாயின் நிச்சயமாக தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெற்றுக் கொள்வார்கள். 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டங்களை (Bachelor of Technology -B.Tech) வழங்குவதற்காக இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலுமுள்ள விஞ்ஞானபீடங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களாக மாற்றியமைக்கப்படும். இவற்றினூடாக நாற்பது வரையிலான புதிய கற்கை நெறிகளை தொழில்நுட்பத்துறை மாணவர்கள் பயில்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்

இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்கலைக்கழக கல்லூரிகளை (University Colleges) ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இவற்றின் மூலம் தொழிற்றுறைக்குப் பொருத்தமான டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் தொழில்நுட்பத்தில் இளமாணிப்பட்டங்களை வழங்கக் கூடியதாக இருக்கும்

இத்துறை மாணவர்கள் "ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்" போன்ற தொழில்கற்கை நிறுவனங்களில் இணைந்து டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்புக்களும் வழங்கப்படும். பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையாவிடினும் அவர்கள் பெற்ற செய்முறை அறிவுக்காக அவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (National Vocational Qualification-NVQ-III) வழங்கப்படும். இது தொழில் பெறுவதற்கான அடிப்படைத் தகைமையாகும் என்பதுடன் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் இது உதவும்.

**இலங்கையில் தொழில்நுட்பக்கல்வியை சிரேஷ்ட இடைநிலை வகுப்பில் வழங்குவதால் ஏற்படும் நன்மைகள்**

✷ தொழில்நுட்பக் கல்வியின் அறிமுகமானது வேலையுலகிற்கும் தொழில்நுட்ப உலகிற்கும் அறிமுகத்தைத்தருவதுடன் கல்விப் புலத்தையும் விரிவுபடுத்த உதவுவதாக அமையும்.

✷ இதன் விளைவானது கற்றல் சாதனங்கள், கருவிகள், உத்திகள் மற்றும் உற்பத்திப் படிமுறைகள், பகிர்வு, முழுமையான முகாமைத்துவம் என்பவற்றை தேடி ஆராய்வதாக அமைவதோடு செயன்முறை அனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயன்முறைகளைப் பெறுமதிமிக்கதாக்குகிறது.

இலங்கையின் பொதுக் கல்வி



யின் ஒரு மைல்கல்லான, தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள உயர்தர தொழில்நுட்பத்துறையை அடையாளம் காண முடியும். ஏனெனில், இது உயர் தரத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும். அத்துடன் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்துறை மாண வர்களின் எண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டளவில் சுமார் 40வீதத்தினால் அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

✷ தொழில்நுட்பத்திறன் கொண்ட மாணவர்கள் பட்டதாரிகளாகும் போது நாட்டின் பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த அபிவிருத்திக்கு அவர்களால் ஆக்கத்திறனுடன் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கக் கூடிய தாக இருக்கும்.

✷ கோட்பாட்டு அறிவு ரீதியாக மட்டுமின்றி க.பொ.த. உயர்தரத்தில் பயிலும் இலங்கை மாணவர்கள் செயன்முறை ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்வதில் இத் தொழில்நுட்பப் பாடத்துறையின் அறிமுகமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

**நடைமுறைப்படுத்தலில் உள்ள சவால்கள்**

✷ தொழில்நுட்பவியல் பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையால், இதனைப் பயில விரும்பும் ஏனைய பாடசாலை மாணவர்கள், அயல் பாடசாலைக்குச் செல்ல இலகுவில் விரும்பமாட்டார்கள். பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் ஊக்குவிக்க மாட்டார்கள்.

✷ இப்பாடத்துறைக்கான தயாரிப்புக்கள் அவசரமாக மேற்கொண்டமையால், பாட உள்ளடக்கம் மற்றும் வழிகாட்டல் தயாரிப்புக்களின் தரம் தொடர்பாக ஐயப்பாடு எழுகின்றது.

✷ இதுதொடர்பான அறிவுறுத்தல்கள், பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் முறையாகப் பாடசாலைகளைச் சென்றடையவில்லை.

✷ கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் தொழில் நுட்பவியல் பாடத்துறை தொடர்பான போதிய விழிப்புணர்வு காணப்படவில்லை.

✷ ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஆரம்பக்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளை விட அத்தொகுதியில் வேறு சில பாடசாலைகள் பொருத்தமானதாக உள்ளன. (14 ஆம் பக்கம் பார்க்க..)

| க.பொ.த. (உயர்தரம்) பாடத்துறை | தற்போது பயிலும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்) | 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்) |
|---|---|---|
| கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறை | 21% | 40% |
| வர்த்தகத்துறை | 27% | 35% |
| கலைத்துறை | 52% | 25% |

**ஆ. நித்திலவர்ணன்**
**விரிவுரையாளர்,**
**கல்வியியற்றுறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை என்பது காலத்தின் கண்ணாடி

# நாடகம் காலத்தை பிரதிபலிக்கும் கலைவடிவம்

நாடகக் கலையானது சக்தி மிக்க கலைவடிவமாக விளங்குகின்றது. நாடகமானது அவ்வக்கால கருத்தியலுக்கு அமைவாக வெளிப்பாடடையும் தன்மையினை கொண்டு விளங்குகின்றது. கலை என்பது காலத்தின் கண்ணாடி என்னும் வகையில் நாடகமும் அதன் காலத்தை பிரதிபலிக்கும் கலைவடிவமாக விளங்குகின்றது. காலத்தை பிரதிபலிக்கும் வகையில் வெளிப்பாடடைகின்ற கலைவடிவங்கள் காலத்தால் நீடித்து வாழ்கின்றன.

அவ்வகையில் நாடகக் கலையும் தன் பங்கினை தேவை கருதி ஆற்றுகின்ற கலைவடிவமாக விளங்குகின்றது.

நாடகக் கலையானது மனிதர்களோடு பின்னிப்பிணைந்துள்ள கலைவடிவமாகும். இயற்கையிலிருந்து இயற்கையின் சூட்சுமங்களை தேடல் செய்து, அவற்றுக்கிடையிலான காரண காரியத் தொடர்புகளை விளக்கிக் கொண்டு மனிதகுல மேம்பாட்டுக்கு பயன் படுத்தப்படும் பிற துறைகளைப் போல நாடகக்கலையும் உயிர்த் துடிப்புள்ள மனித உரு மூலம் மனிதனது உணர்வுகளுக்கு அவன் சார் நடத்தைகளுக்குமான தொடர்புகளை சரியாக புடம் போட்டு அவன் வாழ்கின்ற சமூகத்தின் பின்புலத்தினை உள்வாங்கிக் கொண்டு கலைக்குரிய வளர்ச்சியோடு அதனை விளக்கியும் வியாக்கியானித்தும் மனித குலத்தை வளர்ச்சி பெறச் செய்கின்றது.

மனிதனை மனித உரு மூலம் விளங்கிக் கொள்வதற்கு இக் கலை பயன்படுவதனால் பிற கலைகளை விட நாடகக்கலையானது மனிதர்களோடு மிக நெருங்கிய இறுக்கமான ஊடாட்டமுள்ள கலைவடிவமாக விளங்குகின்றது.

இந் நாடகக் கலைமூலம் சமுதாய விழிப்புணர்வு சார் செயற் பாடுகள்,சமூக மகிழ்வளிப்பு செயற்பாடுகள் போன்றவற்றை பயனுள்ள வகையில் சமூகப் பயன்பாடுடையதாக ஆற்றமுடி கின்றது.

பிரதேசம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் அவற்றினுடைய பண்பாட்டு பின்புலங்களை பிரதிபலிக்கின்ற வகையிலும் சமூகத்தினுடைய தேவையை நிறைவு செய்கின்ற வகையிலும் நாடகக் கலையானது பல்வேறுபட்ட வடிவங்களில் வெளிப்படுகின்றது.

நாடகக் கலையின் சிறப்புக் கருதி வருடாந்தம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் உலக நாடக தினமானது சிறப்பாக பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக நாடக தினமானது ஏன் ஆரம்பிக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன? என்பது பற்றி சிந்தித்தல் ஒவ்வொரு அரங்காளிகளினதும் முக்கிய கடனாக விளங்குகின்றது.

1961 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் சர்வதேச அரங்க அமைப்பின் 9 ஆவது ஒன்றுகூடலாக கெல்சிங், வியன்னா ஆகிய இடங்களில் சர்வதேச அரங்கத்திட்டம் உருவாக்கப் பட்டது.

சர்வதேச அரங்கத் திட்டம் என்னும் சொல்லுக்கு மாற்றீடாக அர்விகிவிமா என்பவரால் உலக நாடக தினம் என்பது முன்மொழியப்பட்டது. எனினும் 1962 இல் பிரான்சில் பங்குனி 27 ஆம் திகதியே நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நூறுக்கு மேற்பட்ட நாடுகளில் இத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.



## உலக நாடக தினம் இன்று

இவ் உலக நாடக தினமானது மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஆற்றுகைக் கலைகளின் சக்தியை மக்கள் முன்னிலையில் வெளிக்கொண்டு வருவதற்கு அரங்கக் கலைஞர்களாலும் மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலக நாடக தினமானது நடைபெறுவதன் நோக்கமாக பின்வரும் அம்சங்களை குறிப் பிடலாம்.

1. ஆற்றுகை கலையின் முக்கியத்துவத்தையும் அதன் பயில்வையும் சர்வதேச ரீதியில் பரிமாறிக் கொள்ளவும் ஊக்குவித்தல்.
2. அரங்கக்கலைஞர்களுக்கு இடையில் கூட்டுணர்வை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் ஆக்கத்திறன் மீதான அக்கறையை விருத்தி செய்தல்.
3. இக்கலைப்படைப்பு மீதான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் உருவாக்குதல்.
4. இந்நிகழ்வில் பங்கு கொள்வதன் மூலம் மக்களிடையே ஆழமான புரிந்துணர்வுக்கும் பங்கு கொள்ளலை வலுப் பெறச் செய்வதற்கும் முனைப் பூட்டுதல் ஆகிய அம்சங்களை கொண்டுள்ளது.

அரங்க ஆர்வலர்களால் அனுஷ்டிக்கப்படுகின்ற உலக நாடக தினமானது எமது நாட்டைப் பொறுத்த வரையிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப் படுகின்றது.

வலி.தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகமானது 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக உலக நாடக தினத்தை வருடாந்தம் சிறப்பாக கொண்டாடி வருகின்றது.

புத்தாக்க அரங்க இயக்கம், திருமறைக்கலாமன்றம் போன்ற நிறுவனங்களும் நாடக தினத்தை கொண்டாடி வருகின்றன.

இதேபோன்று சமூக நிறுவனங்கள் அரங்கு சார் நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றனவும் தமது இயலளவிற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் உலக நாடக தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றன.

நாடகக் கலையின் வளர்ச்சி கருதியும் தொடர் இயங்குதலின் அடிப்படை கருதியும் ஆற்றுகைக் கலைஞர்களாலும் அரங்க ஆர்வலர்களாலும் அனுஷ்டிக்கப் படவேண்டிய முக்கிய தினமாக உலக நாடக தினமானது அமைகின்றது.

**எஸ்.ரி.குமரன் MA**
நாடகத்துறை ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# நாட்டை மீண்டும் அடிமைப்படுத்த இடமளிக்க முடியாது-பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டை மீண்டும் அடிமைப் படுத்த இடமளிக்க முடியாது என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நீண்ட காலமாக நீடித்து வந்த போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, நாடு அபிவிருத்திப் பாதையை நோக்கி நகர்கின்றது.

ஜெனீவா சூழ்ச்சித் திட்டம் ஊடாக நாட்டை மீண்டும் அடிமைப் படுத்த இடமளிக்க முடியாது.

முக்கியமான வீரர்கள் உருவான தென் பகுதியிலிருந்து வந்த ஜனாதிபதியின் வீரதீர செயற்பாடுகளினால் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது.

போரின் பின்னர் நாட்டில் இடம் பெற்று வரும் அபிவிருத்தியை சீர் குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது.

நாட்டைக் காட்டிக் கொடுத்து வயிற்றுப் பிழைப்பை நடத்தும் தேசத் துரோகிகள் எல்லா நாடுகளிலும் இருக்கின்றார்கள்.

தேசத் துரோகிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என பிரதமர் தெரிவித்துள்ளார்.(2)

# ஜனநாயகக் கட்சிக்கு அழுக்கு ஏற்படுத்த அரசாங்கம் பணம் வழங்குகிறது

## பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொட

(கொழும்பு)

அரசாங்கம் தம்மை பிரதான சவாலாக கருதி செயற்பட்டு வருவதாக ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

கட்சியில் ஜனநாயகம் கிடையாது எனவும் தலைவர் சரத்பொன் சேகாவை பணி நீக்க வேண்டும் எனவும் கோருவதில் அர்த்தமில்லை.

கட்சியைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்தம் பணம் பெற்றுக் கொண்டு [illegible] பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாக்காளர்கள் தமக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என அஞ்சியுள்ள ஒரு சில வேட்பாளர்கள் இவ்வாறு அரசாங்கத்துடன் இணைந்து. கட்சிக்கு எதிராக போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பூனைக் குட்டியொன்றுக்கும் அரசாங்கம் அஞ்சுகின்றது.

கட்சிக்கு எதிராக சேறு பூசும் விதத்திற்கு ஏற்ப அரசாங்கம் சிலருக்கு பணக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.

எதிர்வரும் 29 ஆம் திகதி மக்கள் [illegible] கெட்டகொட தெரிவித்துள்ளார். (2)

# இன்று முதல் அடுத்துவரும் மூன்று நாட்களுக்கு மின் தடை

(யாழ்ப்பாணம்)

அதி உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளுக்காக மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை சண்டிலிப்பாய், சங்கானை, பண்டைத்தரிப்பு, வடலியடைப்பு, இளவாலை, வட்டுக் கோட்டை, சுழிபுரம்,அராலி சத்தங் கேணி, பண்ணாகம், வழககம்பரை, தொல்புரம், மாதகல், பொன்னாலை, மூளாய், காரை நகர், வேலணை ஆகிய இடங்களிலும்,

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சரசாலை வடக்கு, மட்டுவில் கல்வயல், மந்துவில் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நவக்கிரி, அச்சு வேலி, இடைக்காடு, பத்தமேனி, செல்வநாயகபுரம், கைத்தொழில் பேட்டை, புத்தூர் , ஆவரங்கால், நிலா வரை, சிறுப்பிட்டி மேற்கு, குட்டியப் புலம் ,சுகந்திரபுரம் ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை தலங்காவல், பலாலி வீதி, கந்தர் மடம், ஸ்ரான்லி வீதி, ஆரி யகுளம், இராசாவின் தோட்டம், ஆனைப் பந்தி சந்தி, இலுப்பையடி சந்தி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ் தூரியார் வீதி, மணிக்கூட்டுகோபுர வீதிகளின் ஒரு பகுதி, பரமேஸ்வரா சந்தி, கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி , கோவில்வீதி, நல்லூர், இராசாவின் தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழையபூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத் துறை, நெடுங்குளம், ஆனந்தன் வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந் தோட்டம், புங்கன் குளம் வீதி, பருத்தித் துறை வீதி, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோவில் சந்தி வரை, கொக்குவில தொழில் நுட்ப கல்லூரி, நொதேன் கொம்பனி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி, தட்டார்தெரு- நாச்சிமார் கோவில் வரை, ஐயனார் கோவில் வீதி,கே.கே. எஸ். வீதியில் நாச்சிமார் கோவில்-சிவன் கோவில், மானிப்பாய் வீதியில் ஓட்டு மடம் சந்தி, பிள்ளையார் ஹோட்டல், சிவன் வடக்கு வீதி, சிவன் பண்ணை வீதி, சிவப்பிரகாசம் வீதி, வைத்தீஸ்வரா சந்தி, சீனிவாசகம் வீதி, காதி அபுபக்கர் வீதி, டீ.யு. தம்பி வீதி, ஓடைலேன், மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி சந்தி, கன்னாதிட்டி வீதி, சட்டநாதர் வீதி, பருததித்துறை வீதி, நல்லூர் கோவில், கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி, சங்கிலியன் வீதி, கனகரத்தினம் வீதி, ஆனந்தன் வடலி வீதி, புங்கன்குளம் வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாயன்மார்கட்டு, நல்லூர் குறுக்கு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் அறிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமா இந்தியா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்த நகர்வுகள், இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. திருத்தப்பட்ட இரண்டாவது தீர்மான வரைவுப்படி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகளுக்கு இலங்கை முகம் கொடுப்பதற்கான சூழல் உருவாகும் சாத்தியங்கள் தென்படுகின்றன. இந்த வாரம் நடக்கவுள்ள இந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் போது எவ்வாறு நடந்துகொள்வது என்று பெரும்பாலான நாடுகள் ஏற்கனவே முடிபு செய்து விட்டதாகவே தகவல்கள் கூறுகின்றன.

ஏனென்றால், இந்த தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால், அதை ஆதரிப்பது, எதிர்ப்பது, வாக்களிக்காமல் நடுநிலை வகிப்பது, வாக்களிப்பு நேரத்தில் சபையில் இல்லாமல் இருப்பது- என்று 47 உறுப்பு நாடுகளுக்கும் நான்கு தெரிவுகள்தான் உள்ளன. இந்த நான்கு தெரிவுகளில் எதையேனும் ஒன்றைத் தெரிவு செய்து கொள்வது ஒன்றும் உறுப்பு நாடுகளுக்கு அவ்வளவு கடினமான காரியமில்லை. ஏற்கனவே, தீர்மான வரைவைப் பற்றிக் கவலைப்படாமல், கண்மூடித்தனமாக ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் நிலைப்பாட்டில் ஒரு தொகுதி நாடுகள் இருக்கின்றன.

அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் அவ்வாறு தீர்மானத்தை ஆதரிக்கத் தயாராக உள்ளன. அதுபோலவே ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா, வியட்நாம் போன்ற நாடுகள் தீர்மான வரைவு நீர்த்துப்போன ஒன்றாக இருந்தாலும்கூட எதிர்த்தே வாக்களிக்கப் போகின்றன. எனவே, இவ்வாறு இரண்டு பக்கத்திலும் இல்லாத- பொதுப் படையான நாடுகளின் நிலைப்பாடு குறித்த கேள்விதான், இதுவரை ஜெனிவாவில் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது.

இந்தியா, ஜப்பான், தென்னாபிரிக்கா உள்ளிட்ட இத்தகைய நாடுகளை வளைத்துப் போடுவதற்காக, இரண்டு தரப்புகளுமே ஜெனிவாவிலும் தனிப்பட்ட ரீதியிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்கா தமது தீர்மான வரைவு குறித்து விளக்கமளிக்கவும் அதற்கு ஆதரவு தேடவும் ஜெனிவாவில் மூன்று இணைக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. இதன்மூலம், கிட்டத்தட்ட பெரும்பாலான நாடுகள் தமது நிலைப்பாட்டை எடுப்பதற்கு வழியேற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கா நடத்திய மூன்றாவது இணைக் கலந்துரையாடலை அடுத்து, தீர்மான வரைவைப் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதற்கான ஆதரவை அமெரிக்கா உறுதிப்படுத்திக் கொண்டு விட்டதாகவே தகவல்கள் கூறுகின்றன. எனினும் இறுதியான தீர்மான வரைவு எவ்வாறு இருக்கும் என்பதைப் பொறுத்து மேலும் பல நாடுகளின் முடிபுகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்ற கருத்தும் உள்ளது.

இந்த நிலையில் இந்த முறை தீர்மானத்தில் இந்தியாவினது நிலைப்பாடு என்னவென்ற கேள்வி பெரும்பாலும் எழவில்லை என்றே கூறலாம். அதுபோலவே இந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் போராட்டங்களும் கூட, இந்த முறை தமிழ்நாட்டில் நடக்கவில்லை. கடந்த ஆண்டுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் முன்வைக்கப்பட்ட போது தமிழ்நாட்டில் இருந்து இந்திய அரசுக்கு கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டு, அரசியல் ரீதியாக புதுடெல்லிக்கு அழுத்தம் கொடுப்பதில் தமிழ்நாடு வெற்றியும் கண்டிருந்தது.

அதாவது, இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையையே வளைத்துப் பார்க்கும் அளவுக்கு, தமிழ்நாட்டின் செல்வாக்கு இருப்பதாக ஏனைய மாநிலங்கள் பொறாமைப்படும் நிலை மட்டுமன்றி, பொருமுகின்ற நிலையும் காணப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு இந்த தீர்மான விவ்காரத்தில் இந்தியாவும் அவ்வளவாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ்நாடும் அவ்வளவாக அழுத்தம் கொடுப்பதாகத் தெரியவில்லை. தமிழக கட்சிகளில் சில இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை இந்தியாவே முன்மொழிய வேண்டும் என்று அறிக்கை விட்ட தோடும், மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றிய தோடும் நின்றுகொண்டன. அடுத்த மாதம் 24 ஆம் திகதி தமிழ்நாட்டில் நடக்கப்போகும், நாடாளுமன்றத் தேர்தல் ஆரவாரங்களில் ஈடுபட்டுள்ளதால், கட்சிகள், இதனை மறந்துவிட்டதாக கருத முடியாது. ஒருவேளை, காங்கிரஸ் கட்சிக்கு, தமிழ்நாட்டில் பலமான ஒரு மாநிலக் கட்சியின் கூட்டணி கிடைத்திருந்தால், இந்த விவகாரம் இன்னும் சூடுபிடித்திருக்கக் கூடும்.



ஆனால், தேர்தலில் காங்கிரஸ் கட்சி அநாதரவாக விடப்பட்டுவிட்ட நிலையில், இலங்கைத் தமிழர் விவகாரத்தை வைத்து வாக்குக் கேட்கும் நிலை பெரும்பாலும் இல்லாமல் போய்விட்டது. எவரும் எதிர்த்துப் பிரசாரம் செய்யாது போனாலும்கூட காங்கிரஸ் கட்சியால் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற முடியாத நிலையே உள்ளது. அதேவேளை, தேர்தல் ஆரவாரங்களுக்குள் தமிழகம் அகப்படாமல் போயிருந்தால்கூட, இந்தமுறை புதுடெல்லியின் முடிபு குறித்து தமிழகம் அதிக அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்றே தெரிகிறது. அது தேர்தல் என்ற காரணியைப் புறந்தள்ளிவிட்டுப் பார்க்கக் கூடிய விடயமாகும். உள்நாட்டு அரசியல் நலன் கருதி எடுக்கத் தூண்டும் முடிவுக்கு அப்பாற்பட்ட விவகாரம் இது. அதாவது, இந்தியா இந்த தீர்மான வரைவை நிராகரிக்க முடியாத ஒரு நிலையை அமெரிக்கா உருவாக்கியுள்ளதே அந்தக் காரணி.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எவற்றைக் கோருகிறதோ அவற்றையும் மிகத் தந்திரமாக அமெரிக்கா இந்த வரைவில் உள்ளடக்கி விட்டுள்ளது. இந்தியாவுக்கு இப்போது சவாலாக உள்ள விடயம், தனக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் இலங்கை மீறிச் செயற்படுகிறதே என்பதே. குறிப்பாக அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைக் காப்பாற்ற இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதன்மூலம், தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவினது நிலைப்பாடாக இருந்து வருகிறது. இதனை எத்தனையோ முறை இலங்கையிடம் இந்தியா வலியுறுத்திக் கூறியும், அந்த வாக்குறுதியை கொழும்பு நிறைவேற்றவேயில்லை.

ஒரு பக்கத்தில், இந்த வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றவில்லை என்று இந்தியா ஆத்திரம் கொண்டாலும் இன்னொரு பக்கத்தில் அயல்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று தனக்குத் தானே போட்டுக் கொண்ட வட்டத்தை விட்டு வெளியே வரவும் முடியாத நிலையில் தான் இந்தியா இருக்கிறது. வெளிப்படையாகச் சொல்லப் போனால், இலங்கை மீது கோபம் கொள்ளவோ, அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ முடியாத நிலையில், ஒரு கையறு நிலையில் இருந்து வந்தது இந்தியா. இப்படியான சூழலில், அமெரிக்கத் தீர்மான வரைவு அதிகாரப் பகிர்வையும் 13 ஆவது திருத்தச் சட்டத்தினது முழுமையான நடைமுறைப்படுத்தலையும் வலியுறுத்தி நிற்கிறது.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வடக்கு மாகாணசபை காத்திரமான முறையில் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும், இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது தீர்மான வரைவு. இப்படியான நிலையில் இலங்கை விவகாரத்தில், இந்தியாவினது தன்மானத்துக்கு சிக்கலைக் கொடுத்து வந்த பிரச்சினைக்கு அமெரிக்கா ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் ஊடாக தீர்வு காண வழியமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள போது இந்தியாவினால் அதைத் தட்டிக்கழிக்க முடியாது. அவ்வாறு தட்டிக்கழிக்க முனைந்தால், இந்தியா இந்த விவகாரங்களில் கூறும் தமது நிலைப்பாடு உண்மையானது தானா என்ற கேள்வியை உருவாக்கி விடும்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மூலம், போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்ற தீர்மான விரைவின் பகுதிகளை இந்தியா விரும்பாது போனாலும் கூட, அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு போன்றவற்றில், இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கு இந்த தீர்மானம் உதவும் என்று இந்தியா நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவினது ஆதரவைப் பெறுவதற்கு புதுடெல்லியின் வாலைப் பிடித்துக்கொண்டு அலைவதை விட, இராஜதந்திர காய்நகர்த்தல்களின் மூலம், இந்தியத் தரப்பை மடக்கிப் போட்டுள்ளது அமெரிக்கா. இப்போது இந்தியாவினால் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதை விட வேறொரு தெரிவு இல்லை. அந்த முடிபை இந்தியா எடுத்து விட்டதாகவே, புதுடெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. உள்ளக அரசியல் அழுத்தங்களின் காரணமாக மட்டும் இந்தியா இந்த முடிபுக்கு வரவில்லை. இலங்கை சார்ந்த அதன் வெளிவிவகாரக் கொள்கையின் படியும். இதே முடிவைத் தான் இந்தியாவினால் எடுக்க முடியும்.

ஆரம்பத்தில் இருந்தே, இந்தியாவினது நிலை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சூசகமாகத் தெரிவித்திருந்தார். பின்னர், வரைவு கிடைத்ததும், அதுபற்றி முடிபு செய்யப்படும் என்றது இந்தியா. வரைவு கையில் கிடைத்து இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் இந்தியாவின் பக்கத்தில் இருந்து எந்த அதிகாரபூர்வ பதிலையும் காணவில்லை. ஜெனிவாவில் நடந்த இணைக் கலந்துரையாடல்களில் கூட, இந்தியா திருத்தங்களை முன்வைக்கவில்லை. அதில் இளநிலை அதிகாரிகளே பங்கேற்றதுடன், தீர்மான வரைவு குறித்து வெளிப்படையான கருத்துக்களையும் அவர்கள் வெளியிடவில்லை.

இதுவே, இந்தியாவின் நிலையை தெளிவாக்கிவிட்டது. அதாவது அமெரிக்காவினது தீர்மான வரைவை ஆதரிக்கும் முடிபுக்கு வந்து விட்டதென்பதையே அது உணர்த்தியது.

ஆனால், சிலவேளைகளில் தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளில் இந்தியா பின் கதவால் முயற்சிக்கலாம். ஆனாலும், முன்னரைப் போல, இந்தமுறை தீர்மான வரைவைத் திருத்தாவிடின் ஆதரவாக வாக்களிக்க முடியாது, நடுநிலை வகிக்க நேரிடும் என்று மட்டும் அமெரிக்காவுடன் பேரம் பேச முடியாது. அதனால் பெரும்பாலும் இந்தியா இதனை நீர்த்துப்போகச் செய்ய முனையாது என்றே எதிர்பார்க்கலாம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் எம்மை வெற்றியாளர்களாக எதிர்காலத்தில் முன்னேற்றி செல்வார்கள்

## தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் மகிந்த



கொழும்பு மாளிகாவத்தையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

(கொழும்பு)

**ஜெனீவாவில் வெற்றியோ தோல்வியோ அது எமக்குப் பிரச்சினையில்லை. எமது நாட்டு மக்கள் எம்மை வெற்றியாளர்களாக எதிர்காலத்திலும் முன்னேற்றிச் செல்வார்களென்ற நம்பிக்கை எமக்குண்டு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவர் தொடர்ந்து கூறுகையில்,

விசாரணைகள் நடத்தப்பட்டால் அது யுத்தம் ஆரம்பித்த காலம் தொட்டு நடத்தப்பட வேண்டும். கடைசி ஐந்து நாள் என்றோ, 2010 இற்குப் பின்போ நடத்தப்படக் கூடாது. இவ்வாறு செயற்படுவது சிலரைப் பாதுகாக்கவே என்பதை நாம் அறிவோம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

30 வருட காலம் இந்த நாட்டில் கொடூரமான யுத்தம் நிலவியது. இந்த யுத்தத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களென அனைத்து இன மக்களும் கொல்லப்பட்டனர்.

இது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தமல்ல. இது இனவாத யுத்தமுமில்லை. அன்று பிரபாகரன் என்ற பயங்கரவாதி ஏற்படுத்திய பயங்கரவாத நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பது எமது பொறுப்பாக அமைந்தது.

இரண்டு மணித்தியாலங்களில் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டனர். அதற்கு முன்னரே சிங்களவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டு விட்டனர். தமிழ் அரசியல் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

துரையப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட படுகொலை அமிர்தலிங்கம், சாம் தம்பிமுத்து, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் என தொடர்ந்தது.

இந்த வகையில் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், காமினி திசாநாயக்க போன்ற அமைச்சர்கள், ஜனாதிபதியான ஆர். பிரேமதாச, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி போன்றோரும் கொல்லப்பட்டனர்.

இதுபோன்று படுகொலை நாட்டில் தொடர்ந்தது. அத்தகைய பயங்கரவாதத்துக்கே நாம் முற்றுப்புள்ளி வைத்தோம்.

2010 இல் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வாக்குறுதியை நாம் மக்களுக்கு வழங்கினோம். அதை நாம் நிறைவேற்றினோம். எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் மக்கள் கண்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றன. அதை உணரக்கூடியதாகவுமுள்ளது.

ஓலைக் குடிசைகளில் வாழ்ந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து அங்கு அவர்களைக் குடியமர்த்துவதாகக் கூறினோம். அதனை நாம் நிறைவேற்றி வருகிறோம். இந்த வருட இறுதிக்குள் அவ்வாறு 20 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டு விடும்.

எதிர்வரும் வருடங்களில் இது 50 ஆயிரமாக அதிகரிக்கும். நாம் இந்த திட்டத்தை ஒத்திப்போடவில்லை தொடர்ச்சியாக முன்னெடுப்போம். இத்திட்டத்தைச் சீர்குலைப்பதற்கு நாம் எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை.

இதுபோன்று நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் போது ஜெனீவாவிற்குப் பதில் சொல்ல நேர்ந்துள்ளது. இன்று சிலர் மத வாதத்தைக் கிளறுகின்றனர். பிரபாகரன் இனவாதத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தாலும் மத வாதத்தைப் பயன்படுத்தியதில்லை. சிலர் இப்போது மதவாதத்தைப் பரப்பி வருகின்றனர்.

நாம் மத நல்லிணக்கத்துடன் நாட்டைக் கட்டியெழுப்பி வரும்போதே சிலருக்கு ஜெனீவா ஞாபகத்துக்கு வருகிறது.

ஜெனீவா விவகாரம் நெருங்கும் போதே அவர்கள் இத்தகைய அனைத்துப் பிரச்சினைகளையும் முன்வைக்கின்றனர். சிலரது எதிர் பார்ப்பானது. வெளிநாடுகளுடன் சேர்ந்து அதன் மூலம் பலமடைந்து எம்மைக் கவிழ்ப்பதே.

வெளிநாடுகளில் அல்லது ஜெனீவாவில் நாம் வெற்றியீட்டினாலும் தோல்வியுற்றாலும் அதில் எமக்குப் பிரச்சினையில்லை. எனினும் எமது நாட்டு மக்கள் எம்மை வெற்றியாளர்களாக முன்னோக்கிக் கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதனால் ஜெனீவா பற்றி நான் கணக்கிலெடுப்பதே இல்லை.

நாம் மனசாட்சிக்கு நீதியானதையே செய்தோம். இந்த நாட்டிலுள்ள சகல மக்களினதும் நன்மைக்காகவே அதைச்செய்தோம். இந்த நாட்டை நாம் அபிவிருத்தியில் கட்டியெழுப்புவோம் என்றார். (2)



இணுவில் பொது நூலகத்தினரால் இரத்ததான நிகழ்வு அண்மையில் நூலக மண்டபத்தில் இடம்பெற்ற போது இரத்ததானம் வழங்கியவர்கள், ஏற்பாட்டாளர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: மல்லாகம் செய்தியாளர்)

## இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிக்க வேண்டும்

### இந்திய வெளிவிவகார அமைச்சு

இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் பயிற்சி நடவடிக்கைகளமுன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத அடிப்படையில் கடற்படையினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது என கோரியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (2)

## நாட்டை துண்டாட முஸ்லிம் மக்கள் பங்களித்திருந்தால் துரத்தப்பட்டிருக்கமாட்டார்கள்

### றிசாத் பதியுதீன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் தவிர எந்தவொரு முஸ்லிமும் வடக்கில் மீள்குடியேற்றப்படவில்லை. அவ்வாறு வெளிநபர்கள் யாராவது மீள் குடியேற்றியதாக நிரூபித்தால் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடபகுதி முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் அமைச்சரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கிலிருந்து புலிகளால் துரத்தப்பட்ட மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் முழுமை பெறாதிருப்பதாக குறிப்பிட்ட அவர், வில்பத்து சரணாலயத்தை அழித்து முஸ்லிம்களுக்கு வீடுகள் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் ஒருபோதும் நாட்டுக்கு எதிராக செயற்படவோ துரோகம் செய்யவோ முற்பட்டது கிடையாது எதிர்காலத்திலும் முஸ்லிம்கள் நாட்டுக்கு துரோகம் செய்யப்போவதில்லை.

வட பகுதியில் இருந்த ஒரு இலட்சம் மக்கள் சில மணி நேரங்களில் அங்கிருந்து துரத்தப்பட்டு 20 வருடங்களுக்கு மேல் ஆகிறது. நாட்டைத் துண்டாட பங்களித்திருந்தால் அந்த மக்கள் துரத்தப்பட்டிருக்கமாட்டார்கள். சமாதானம் நிலைநாட்டப்பட்ட போதும், இன்னும் முஸ்லிம்கள் கஷ்டங்களுடனே உள்ளனர்.

சமாதானத்தின் பலன்கள் முழுமையாக அவர்களை சென்றடையவில்லை. இவர்களின் சில காணிகளில் படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, சிலவற்றில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் மாற்றுக் காணிகளில் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

துரத்தப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் பற்றி இந்தியாவோ, அமெரிக்காவோ வேறு முஸ்லிம் நாடுகளோ குரல் கொடுக்கவில்லை. வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 400 வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் வில்பத்து காட்டை அழித்து முஸ்லிம் கொளனியமைக்கப்படுவதாகவும் முஸ்லிம் வலயம் உருவாக்கப்படுவதாகவும் பொதுபல சேனா அமைப்பும் குற்றஞ்சாட்டியுள்ளது.

என்னை தொடர்புபடுத்தி தெரிவிக்கப்பட்ட இந்த தவறான குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன். நான் இன, மத பேதமின்றியே சகலருக்கும் சேவையாற்றுகிறேன். இந்த பொய்க் குற்றச்சாட்டுக்கு எதிராக 500 மில்லியன் நஷ்டஈடு கோரி கோரிக்கை கடிதம் ஒன்றை சட்டத்தரணி ஊடாக அனுப்பியுள்ளேன்.

இரு வாரங்களுக்குள் இதற்கு தகுந்த பதிலை வழங்காவிட்டால் அமைப்பின் செயலாளருக்கு வழக்கு தொடரப்படும்.

வடக்கில் சட்டபூர்வமாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதோடு, மீள் குடியேற்றங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

இதனை குழப்ப சில சக்திகள் முயல்கின்றன. தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும் இது சகலருக்கும் சொந்தமான நாடாகும் என்றார். (2)

## புத்தாக்கக் கண்காட்சியில் வெற்றியீட்டியோர் விபரம்

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சஹாசக் நிமவும் எனும் தேசிய மட்ட புத்தாக்க கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

இதில் வடமாகாணம் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரி கொழும்பு-07 இல் வைத்து வழங்கப்படவுள்ளது.

பரிசில்களைப் பெறும் மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு

ஆர்.டபிள்யூ வி. மொறாயஸ், ஆர்.ஜே.பி. மொறாயஸ் (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ம.சஞ்சித் (வு/வவுனியா தமிழ் ம.ம.வி), ம.சங்கீர்த்தனா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), உ.கௌசிகா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்), தி.தனுசியன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.இராகவர்சன் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), உ. சார்த்தீபன் (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி) (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரணான கருத்துக்களை வெளியிடும் ஆனந்தசங்கரியை த.தே.கூட்டமைப்பிற்குள் வைத்திருப்பது பொருத்தமா?

## தமிழ்மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.



**தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதாக ஊடகத்தில் பார்த்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் கூறியுள்ளார்.**

ஆனந்தசங்கரி இந்தியப் பிரதமருக்கு எழுதி அனுப்பிய கடிதம் தொடர்பாக கருத்து கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்.

இலங்கையிலே இடம்பெற்ற இனப்படுகொலையானது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தினால் நன்கு திட்டமிட்டு அரங்கேறிய ஒரு செயற்பாடாகும்.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு பல ஆண்டுகள் கடந்த நிலையில் இதுவரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் எந்தத் தீர்வும் கிடைத்தபாடில்லை.

அதற்காக வேண்டி சர்வதேசத்தினை நாடியிருக்கும் இந்தக் காலகட்டத்தில் ஆனந்தசங்கரியின் கடிதங்கள் வெந்த புண்ணில் வேலைபாய்ச்சுவது போல் இருக்கின்றது.

சர்வதேசத்தினை நாடி சர்வதேச விசாரணை ஒன்று கட்டாயம் நடைபெற வேண்டும் என்பது ஒட்டுமொத்த தமிழர்களது விருப்பாகும். தமிழர்களை சிறிதளவேனும் கருத்தில் எடுக்காத அவர் கடிதம் எல்லோர் மனங்களையும் நோகடிக்கச் செய்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவினால் இரண்டு தடவைகள் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு பிறபாடும் ஆனந்தசங்கரி வழமை போன்று சர்வதேச விசாரணை ஒன்று தேவையில்லை என்றும், மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் 8 ஆவது சரத்தினை திருத்துமாறும் அவர் கூறியிருக்கின்றார்.

தன்னை த.தே.கூட்டமைப்பு ஒதுக்கியதாகக் கூறும் இவர் கூட்டமைப்புஎடுக்கும்முடிவிற்கு முரணான கருத்துக்களை தெரிவித்து எடுத்த எடுப்பில் கடிதங்களை எழுதும் அவரை இனிமேலும் த.தே.கூட்டமைப்பிற்குள் வைத்திருப்பது பொருத்தமான செயற்பாடா என்பதனை தமிழ்மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

த.தே.கூட்டமைப்பு எந்த முடிவினை எடுத்தாலும் அதற்கு முட்டுக்கட்டை போடுவதும் முரணாகப் பேசுவதும் இவரது செயற்பாடாகப் போய்விட்டது. இவர் தலையிருக்க வால் ஆடினால் கூட்டமைப்பு அழியும் என்று கூறியிருந்தார்.

அப்படியானால் வால் இருக்க தலையாடியதனால்தான் த.வி. கூட்டணியை மக்கள் வடமாகாண சபை தேர்தலிலே நிராகரித்திருந்தார்களா?.

வடமாகாணசபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பில் உள்ள 5 கட்சிகள் ஒன்றாக இணைந்து போட்டியிட்ட போதும் த.வி. கூட்டணி சார்பாக போட்டியிட்ட எவரும் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை.

குறிப்பாக அதன் தலைவர் சங்கரி சொந்த மாவட்டமான கிளிநொச்சியிலே தோல்விகண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆயுதப் போராட்ட காலத்திலும் சங்கரி எவ்வாறு நடந்து கொண்டார் என்பதனை ஒவ்வொரு தமிழனும் அறிந்திருக்கின்றான்.

கடிதம் எழுதி காலத்தை போக்கும் இவர், த.தே.கூட்டமைப்பு என்று கூறிக்கொண்டு இந்த அரசாங்கத்தினை காப்பாற்ற முயல்வது அவரது துரோக அரசியலா? தியாக அரசியலா? என்பதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

உதவி செய்யாவிட்டாலும் உபத்திரம் செய்யக்கூடாது என்ற பழமொழி ஒன்று இருக்கின்றது.

இதனை இவர் அறிந்திருப்பது கட்டாயமாகும்.

இன்று தமிழ் மக்களுக்காக புலம்பெயர் அமைப்புக்களும் சர்வதேசமும், த.தே.கூட்டமைப்பும் ஒன்றித்து அயராது உழைத்துக் கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் அதனை கெடுப்பதற்காக த.தே. அரசியலை பேசிக்கொண்டு இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்படும் சங்கரி போன்றவர்களை த.தே.கூட்டமைப்பில் தொடர்ந்தும் வைத்திருப்பதால் பாரிய பின்விளைவுகள் ஏற்படும் என்பதனை த.தே.கூட்டமைப்பின் ஒற்றுமையைப்பற்றி பேசும் ஒவ்வொருவரும் மனச்சாட்சியுடன் புரிந்து கொள்ளவேண்டும்.

5பேர் உறுதியுடன் ஒற்றுமையாக இருப்பதனைவிட ஒற்றுமை என்ற பெயரில் 50பேரை இணைத்து இவ்வாறான முரண்பாடான கருத்துக்களை கூறுவதால் தமிழ் மக்களுக்கான விடிவு என்பது எட்டாக்கனியாகவே அமைந்து விடும்.

இன்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை இந்த நாட்டிலே இடம்பெற்ற இனப்படுகொலைக்கு கட்டாயமாக சர்வதேச விசாரணை தேவை. இதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அப்போதுதான் இந்த நாட்டிலே இடம்பெற்ற கொடூர யுத்தத்திற்கு தீர்வு கிடைக்கும் என்று ஏங்கித் தவிக்கும் இந்த காலகட்டத்தில் இவர் போன்றவர்களின் கடிதங்கள் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் வேதனைக்கு உள்ளாக்கும் செயற்பாடாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2)



வேலணை பிரதேச செயலர் பிரிவில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையற் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் வேலணைப் பிரதேச செயலர் தையற்பயிற்சியை நிறைவு செய்த பெண்ணொருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இலங்கையில் க.பொ.த(உ/த) வகுப்புக்களில்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)...

தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் ஆண் பிள்ளைகள் மட்டும் அல்லது பெண்பிள்ளைகள் மட்டும் கல்வி கற்கும் பாடசாலைகளாக உள்ளன.

✷ செயன் முறைப்பயிற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் இன்னும் பாடசாலைகளில் முழுமையாகஉருவாக்கப்படவில்லை.

✷ இப்பாடத்துறையைதெரிவுசெய்வது தொடர்பாக மாணவர்கள் மற்றும்பெற்றோரிடத்தில்போதியளவுநேர் மனப்பாங்கு காணப்பட வில்லை.

✷ இது தொடர்பிலான மாகாண மட்டத்திலான, கல்வி வலய மட்டத்திலான மற்றும் பாடசாலை மட்டத்திலான கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் போதியளவு நடத்தப்படவில்லை.

தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பாக கட்டுரையாசிரியரின் அவதானிப்புக்கள்.

✷ க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையைப் பயில எண்ணும் மாணவர்களும் கணித விஞ்ஞானத்துறைக்கு தோற்றி சித்தியடைந்த தவறும் மாணவர்களும் தொழில் நுட்பவியல் பாடத்துறையைப் பயில்வதைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்கலாம்.

✷ இத் துறைப்பாடங்களை தனியொரு ஆசிரியர் மட்டும் கற்பிக்க முடியாது. பாடத்துறையிலுள்ள கணிதம், உயரியல், இரசாயனவியல், பௌதிகவியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் பொருத்தமான ஆளணி யினர் இணைந்து ஓர் கூட்டு முயற்சியாகவே இதனை முன்னெடுக்கமுடியும். பாடசாலை அதிபர்கள், இதனைக் கருத்தில் கொண்டு நேரசூசிகளை தயாரிக்க வேண்டும்.

✷ இத்துறையைப் பயில்வதற்கான அடிப்படைத் தகைமையில், க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான திறமைச் சித்தி அவசியமில்லை. ஆனாலும் கட்டுரை ஆசிரியர் தொழில் நுட்பவியல் பாடத்துறை பாடங்களின் விடயதானங்களை பரீட்சித்துப் பார்த்ததில் மேற்படி பாடங்களில் திறமைசித்தி பெறாதவர்கள் க.பொ.த.உயர்தரத்தில் தொழில் நுட்பவியல் துறையைப் பயில்வது சற்றுக் கடினமானதாக இருக்கும். எனவே, இதன்மூலம் க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான உயர் அடைவின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது.

✷ க.பொ.த. சாதாரணதரத்தில் மாணவர்கள் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், கடல்வளம் போன்ற பாடங்களைத் தெரிவு செய்து கற்பது. க.பொ.த. உயர்தரத்தில் தொழில் நுட்பத்துறை பாடங்களை கற்பது இலகுவாக அமையும். எனவே இதற்கான வழிகாட்டல்கள் கனிஷ்ட இடை நிலை வகுப்புக்களிலேயே வழங்கப்பட வேண்டும்.

✷ இப்பாடத்துறையை பயில்வது தொடர்பான மனப்பாங்குகள் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடமும் ஏற்பட வேண்டும்.

✷ தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான விழிப்பூட்டல்களையும் ஏனைய வளங்களையும் பாடசாலைகளுக்கு பல்கலைக்கழகங்களும் தொழில்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன வழங்க வேண்டும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பிரித்தானிய அரசு ஒத்துழைப்பு வழங்கும்

(கொழும்பு)

ஜெனீவா மனிதவுரிமைப பேரவையில் இலங்கை தொடர்பில் விமர்சிக்கப்படுவது இலங்கைக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை முன்வைப்பதன் ஊடாகவோ இலங்கை மீது விமர்சனம் செய்வதன் ஊடாகவோ தாம எந்தவொரு இலாபத்தையும் எதிர்பார்க்கவில்லை என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்கள் காரியாலய அமைச்சர் கியூகோஸ்வயர் தெரிவித்துளளார்.

அந்நாட்டில் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற வேளை அங்கு யுத்தம் இடம்பெற்ற இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியுள்ளார். இலங்கையிலுள்ள நிலைமைகளை அறிந்தமையின் காரணமாகவே இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பிரித்தானிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# சிநேகபூர்வ மோட்டார் சைக்கிள் சவாரி

(யாழ்ப்பாணம்)

மலேசியாவைச் சேர்ந்த 9 பேர் கொண்ட மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் அணி ஒன்று இலங்கை முழுவதும் சிநேகபூர்வ மோட்டார் சைக்கிள் சவாரியை மேற்கொண்டு வருகின்றது.

இச் சவாரியானது இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலையில் இருந்து புறப்பட்டு புல்மோட்டை அரச மரத்தடிச் சந்தி, வவுனியா ஊடாக யாழ்ப்பாணத்தை பிற்பகல் 2 மணியளவில் வந்தடையும்.

இவர்களை வரவேற்கும் நிகழ்வொன்று துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.கட்டளைத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (2)

# அனுமதிப்பத்திரம் இன்றி பயணிக்கும் பேருந்துகள்

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையேயான போக்குவரத்தில் அனுமதி பத்திரமின்றி சுமார் 40 பேருந்துகள் ஈடுபடுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பிலபொலிஸ்மா அதிபரை தெளிவுபடுத்தியுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன குறிப்பிட்டுளளார்.

ஆயினும், இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தமது ஆணைக் குழுவிற்கு இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கையானது, போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டு, சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.(2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## சின்னதுரை நவரட்னராஜா

புங்குடுதீவு 11ஆம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா Croydon ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதுர்ரை நவரட்னராஜா கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு Oshwal Hall Oshwal Mahajanwadi, 1 Campbell Road, London Road Junction, Croydon, Surrey CRO 2SQ, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி சிவானந்தசுந்தரம் சிவமணி

தெல்லிப்பழை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டன் Wimbleden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவ்ானந்தசுந்தரம் சிவமணி கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Morden Assembly Hall, Tudor Drive, SM4 4PJ, Morden, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி மரியநாயகம் திரேசம்மா

இளவாலை மணியகாரன் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் திரேசம்மா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் இளவாலை St.Annes Cemetery என்னும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



## கைலாயபிள்ளை ராஜேந்திரா

திருகோணமலை உப்புவெளியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை செல்வநாயகபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டகைலாயபிள்ளை ராஜேந்திரா நேற்று புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு 889, செல்வநாயகபுரம் திருகோணமலை என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் அலஸ்தோட்டம் 3 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## சின்னத்தம்பி சிறிதரன்

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடா றொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிறிதரன் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 8.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி நித்தியானந்தவேல் வனிதா

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் ஹெல்சிங்கோரை வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தவேல் வனிதா கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11 மணிக்கு 3 Torpenskapel, Nederste Torpenvej 3050, Humlebaek, Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.



## சின்னையா சக்திவேல்

கொக்குவில் கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சக்திவேல் (ஓய்வுபெற்ற நில அளவை கண்காணிப்பாளர்) கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு 55/10 Nemala Mariya Mawatha, Handala, Watala என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் கிரவலமிரிய பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## விஸ்வலிங்கம் திருலிங்கேஸ்வரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் திருலிங்கேஸ்வரன் கடந்த 23ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல்.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# 13 ஆவது திருத்தச்சட்டம் சரியென ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது

## அமை.டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது அந்த நாட்டில் வாழுகின்ற மக்களை வென்றெடுக்கக் கூடிய வகையிலேயே அமையப்பெற வேணடும்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இன்று அமெரிக் காவும் ஜெனீவாவும் கூட 13ஆவது திருத்தச் சட்டம் தான் சரியென ஏற்றுக் கொள்ளும் நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையில், எமது பிரச்சினைக்கு நாமே தீர்வுகாண வேண்டுமென்பதே யதார்த்தமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொய்யானதும், நிறைவேற்ற முடியாததுமான வாக்குறுதிகளை மககளிடம் வழங்கி தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், தேர்தல் காலங்களின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாது மக்களுக்கான சேவைகளையும் முன்னெடுக்க வேண்டும். ஆனால், தேர்தலில் வெற்றிபெற்றவர்களால் மக்களுக்கான சேவைகள் எவையும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.

இதனால், வாக்களித்த மக்கள் தாம் தற்போது ஏமாற்றப்பட்டிருப்பதாக விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையில் எதிர்காலங்களில் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்போரை எமது மக்கள் இனங்கண்டு அவர்களுக்கு தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும். அப்போதுதான் மக்களது வாழ்வாதாரம் மட்டுமல்லாது அவர்கள் சார்ந்து வாழுகின்ற சமூகங்களும் முன்னேற்றம் காண முடியும் என்று அவர் கூறினார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொள்ள வேண்டுமென நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்த போதிலும் அதனை எதிர்த்தவர்கள் இன்று ஆதரிக்கும் நிலையே காணப்படுகின்றது.

இன்று அமெரிக்காவும் ஜெனீவாவும் கூட 13ஆவது திருத்தச் சட்டம் தான் சரியென ஏற்றுக்கொள்ளும் நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையில், எமது பிரச்சினைக்கு நாமே தீர்வுகாண வேண்டுமென்பதே யதார்த்தமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2)

# ராஜீவ் கொலை குற்றவாளிகளை விடுவிக்க தமிழக அரசு முடிவு செய்தது தவறு

## உச்ச நீதிமன்றில் மத்தியரசு வாதம்

அரசியல் சாசனப்படி சாந்தன் உடபட 7 பேரையும் விடுவிக்க மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உசச நீதிமன்றம் குறைத்தது. மேலும், இவர்களை விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் கூறியது.

இதையடுத்து, சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி உட்பட 7 பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், இது தொடர்பாக மத்திய அரசு மூன்று நாட்களில் பதிலளிக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் மாநில அரசே அவர்களை விடுதலை செய்யும் என்றும் சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனுத்தாக்கல் செய்தது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், முருகன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்ய இடைக்கால தடை விதித்தது.

இந் நிலையில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் வாகன்வதி, முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உட்பட 7 பேரையும் தமிழக அரசு விடுதலை செய்யக் கூடாது என்றும் அரசியல் சாசனப்படி 7 பேரையும் விடுவிக்க மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்றும் தண்டிக்கப்பட்டவர்கள் மனு அளிக்காமலேயே 7 பேரை விடுவிக்க தமிழக அரசு முடிவு செய்தது தவறு என்றும் வாதிட்டார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயமான விமானம் தேடுதல்: மீண்டும் நேற்று ஆரம்பம்



(மெல்போர்ன்)

கோலாலம்பூரிலிருந்து கடந்த 8 ஆம் திகதி 239 பயணிகளுடன் பீஜிங் புறப்பட்ட மலேசியன் ஏர் லைன்ஸ் விமானம் மாயமானது.

இந் நிலையில் பல்வேறு கட்ட ஆய்வுகளுக்கு பின்னர் விமானம் அவுஸ்திரேலியா அருகில் இந்தியப் பெருங்கடலில் விழுந்து விபத்துக் குள்ளானதாக மலேசிய அரசு தெரிவித்தது.

இதையடுத்து விமானத்தை தேடும் பணிகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், மோசமான வானிலை காரணமாக அந்த முயற்சியை ஆஸி. கைவிட்டது. தற்போது வானிலை சீரடைந்துள்ளதால் மீண்டும் விமானத்தை தேடும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (9)

# கிரீமியா-ரஷ்யா இணைவின் எதிரொலி உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் இராஜினாமா

(கீவ்)

***உக்ரைனிலிருந்து வெளியேறிய கிரீமியா ரஷ்யாவுடன் இணைந்ததைத் தொடர்ந்து அங்கிருந்த உக்ரைன் படைகள் வெளியேறத் தொடங்கின. இதனைத் தொடர்ந்து அந் நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் லிகோர் டென் யுக் தனது பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.***

பாதுகாப்புத்துறை அமைச்சர் கிரீமியாவில் பணியில் இருந்த படைகளுக்கு தெளிவான உத்தரவுகளைப பிறப்பிக்கவில்லை என்று தன்மீது எழுந்த விமர்சனங்களை மறுத்ததோடு, பதவி விலகும் உரிமை தனக்கிருப்பதை உறுதிப்படுத்தினார்.

ஆரம்பத்தில் இவரது முடிவை மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்னர் அதனை ஏற்றுக் கொண்டனர்.

பதவி விலகும் அவருக்குப் பதிலாக கேர்னல் ஜெனரல் மிகைல் கோவல்யோவை பாதுகாப்புத்துறை அமைச்சராக நியமிக்க பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.

அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வாக்கெடுப்பின்மூலம் கிரீமியா ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டதில் உக்ரைனின் தயக்கமான நடைமுறைகள் விமர்சனத்திற்கு உள்ளாகின.

கிரீமியா இணைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கையாக ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்ட இராணுவதளத்திலிருந்து உக்ரைன் படைகள் நேற்றுமுதல் வெளியேறத் தொடங்கின.

இவர்களுக்கு கிரீமியாவின் முனனாள் தோழர்கள் மரியாதை தெரிவித்து வழியனுப்பி வைத்தனர்.

இதில் மொத்தம் 6 ஆயிரத்து 500 வீரர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் கிரீமியாவிலிருந்து வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் டென்யுக் குறிப்பிட்டார்.

இந்த எண்ணிக்கையானது அங்குள்ள படை வீரர்கள் 18 ஆயிரம் பேரில் மூன்றில் இரண்டு பங்காக காணப்படுகிறது.



உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சின் நீக்கத்திற்குப் பின்னர் கடந்த மாதம் பதவியேற்ற புதிய அரசு, போராட்டங்களினால் சிதைந்திருந்த நாட்டில் அதிகாரத்தை செலுத்த மிகவும் போராடியது என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். (9)

# தனிஈழம் என்ற எண்ணமில்லை; பா.ஜ.கவின் நிலைப்பாடு இதுதான்

தனிஈழம் என்று ஒரு நாட்டை பிரிக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அந்த நாட்டில் அரசியல் தீர்வுதான் காண வேண்டும். இராணுவ தீர்வு, தீர்வாகாது என பா.ஜ.க. வேட்பாளர் எச்.ராஜா கூறியுள்ளார்.

கீரமங்கலம் சிவகங்கைத் தொகுதியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு எச். ராஜா பதில் அளித்தார்.

இதன்படி, ஒரே கூட்டணியில் உள்ள வைகோவின் ம.தி.மு.க தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள த்னி தமிழ்ஈழம் என்பதை வெங்கையா நாயுடு அது ம.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை, பா.ஜ.க கூட்டணி அறிக்கை இல்லை என்று மறுத்துள்ளாரே? எனக் கேட்கப்பட்டதற்கு ஆம். இதனால் கூட்டணியில் பிளவு என்று சொல்ல முடியாது. எல்லா கட்சிகளும் ஒரே கொள்கையில் இருக்க முடியாது.

நாங்கள் தேசிய கட்சி. எங்களுக்கு என்று கொள்கைகள் உள்ளன. மாநிலக் கட்சிகளுக்கும் தனி கொள்கைகள் உண்டு. ஒரே கொள்கையாக இருந்தால் ஒரே கட்சியாக இருந்திருக்கும்.

பா.ஜ.கட்சியை பொறுத்தவரை ஒரு நாட்டை பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. பேச்சு வார்த்தையின் மூலம் தான் தீர்வு காண முடியும் என்பது எங்கள் நிலை.

சம தர்மம், சம உரிமை என்பதுதான் எங்கள் கொள்கை. ஆனால் 2004 வரை பேச்சுவார்த்தைகள்தான் நடந்து வந்தது. அதன்பின்னர் சோனியா காந்தி தலைமையில் வந்த ஆட்சி தான் இராணுவத்தை அனுப்பியது.

இலங்கை இராணுவத்துடன் இந்திய இராணுவமும் அனுப்பப்பட்டது. அதனால் தான் கோத்தபாய ராஜபக்ஷ இது இந்திய போர் என்று கூறினார்.

2002 இல் பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் போது அங்கு நடந்த போரை நிறுத்த அமைச்சர் அனுப்பப்பட்டு 48 மணி நேரத்தில் போரை நிறுத்திவிட்டு திரும்பினார் என்றார்.

அத்தோடு, அப்படிப்பட்ட ராஜபக்ஷவை பா.ஜ.க. சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்தது என்ற விமர்சனம் உள்ளதே? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

ஒரு நாடு அனுமதி கொடுத்து அழைக்கும் போது அவரை வரவேற்பதில் என்ன தவறு இருக்கிறது என்ற கேள்வியோடு தனது பதிலை நிறுத்திக் கொண்டார். (9)

# ஆப்கான் தேர்தல் அலுவலகம் தீவிரவாதிகளால் தாக்குதல்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலைமை தேர்தல் அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இன்னும் 2 வாரங்களில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. அதை சீர்குலைக்கும் நடவடிக்கையில் தலிபான் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தலைநகர்காபூலிலுள்ள தலைமை தேர்தல் அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் தலிபான்களின் தற்கொலை படையினர் புகுந்தனர். அவர்களுடன் துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகளும் வந்தனர்.

பின்னர் அங்கிருந்த ஊழியர்களை துப்பாக்கி முனையில் சிறை பிடித்த போது தகவல் அறிந்து அங்கு வந்த இராணுவ வீரர்கள் தீவிரவாதிகளின் மீது அதிரடி தாக்குதல் நடத்தினர்.

பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையே சுமார் 2 மணி நேரம் கடும் துப்பாக்கி சண்டை நீடித்தது.

அதில், 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 2 பொலிஸார் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் மொத்தம் 10 பேர் பலியாகினர். இந்த தகவலை உள்துறை துணையமைச்சர் ஜெனரல் அயூப்சாலங்கி தெரிவித்தார்.

தாக்குதல்நடந்த தேர்தல் தலைமை செயலகத்தின் அருகேதான் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களில் ஒருவரான அஷ்ரப் கானியின் வீடு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

# வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை



(பியாய்ங்)

கடந்த 2009 ஆம் ஆண்டு தென்கொரியாவின் போர்க் கப்பல் வடகொரியா கடலில் மூழ்கடிக்கப்பட்டதற்கான வெற்றித்தினத்தை ஏவுகணை பரிசோதனையூடாக வடகொரியா கொண்டாடியுள்ளது.

வடகொரியா தீபகற்பத்தில் தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து போர் பயிற்சி நடத்தி வருகின்றனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில நாட்களாக குறைந்த தூரம் சென்று தாக்க கூடிய ஏவுகணைகளை வீசி வடகொரியா பரிசோதனை மேற்கொண்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நொடாங் என்ற குறுகிய தூரம் சென்று தாக்க கூடிய ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது. இது ஆயிரம் கி.மீற்றர் தூரம் பறந்து சென்று தாக்க வல்லது. பியாங்யாங் வடக்கேயுள்ள சக்கான் மாகாணத்தில் இருந்த கடலில் விழக்கூடிய வகையில் இது ஏவப்பட்டது.

இது ஜப்பானை மட்டுமின்றி ரஷ்யா மற்றும் சீனாவையும் குறி பார்த்து தாக்கும் திறன் படைத்தது. இது கடைசியாக கடந்த 2009 ஆம் ஆண்டு பரிசோதித்து பார்க்கப்பட்ட நிலையில் 4 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது ஏவப்பட்டுள்ளது.

4 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் தென் கொரியாவின் போர்க்கப்பல் வடகொரிய கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அதன் வெற்றி தினத்தை கொண்டாடும் வகையில் 'நொடாங்' ஏவுகணை சோதனை நடந்துள்ளது. இதற்கு அமெரிக்காவும், தென் கொரியாவும் கண்டனம் தெரிவித்துள்ளன. (9)




மாயமான மலேசிய விமானத்தில் பயணித்த 154 சீனப் பயணிகளின் உறவினர்கள் சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள மலேசிய தூதரகத்தின் முன் நேற்றுமுன்தினம் இரண்டு மணிநேரம் போராட்டம் நடத்தினர். விமானத்தை பற்றிய தகவல் தெரிவிக்காமலேயே பயணிகள் இறந்துவிட்டதாக கூறிய மலேசிய அரசுக்கு எதிராக அவர்கள் கோஷமிட்டனர். கண்டன வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியதுடன் சிலர் தண்ணீர் போத்தல்களை தூதரகத்தின் மீது வீசி எதிர்ப்பை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும்
தெரியல்லே – அட
அண்டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம்
புரியல்லே – கவிஞர் கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கடும் துன்பமும் கடும் மௌனமும்

ஒருவருக்குக் கடும் துன்பம் ஏற்பட்டால் அவரிடம் கடும் மௌனத்தையே காணமுடியும். எல்லாவற்றையும் இழந்துபோன துன்பத்தின் வெளிப்பாடு இதுவாகும்.

இந்நிலையில்தான் ஈழத்தமிழ் மக்கள் இருக்கின்றனர். வன்னிப்போரில் ஏற்பட்ட இழப்புக்கள்; அதன் பின்பான நிட்டூரங்கள் எனத் சதா தொடரும் கொடூரத்தனங்களால் தமிழ் மக்கள் மௌனமாக இருப்பதையே கடைப்பிடிக்கின்றனர்.

அதன் விளைவாக ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் அவர்கள் இம்மியும் கவனம் கொள்ளாதவர்களாக இருப்பதைக் காணமுடிகின்றது.

நம்பியவர் அனைவரும் நட்டாற்றில் விட்டால் யாரை நம்புவது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

கடந்த வருடம் ஜெனிவாத் தீர்மானம் கொண்டு வரப்படுகையில், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அதிகமாக இருந்தன.

வன்னிப் போரின்போது ஏதாவது ஒரு நாடு நிறுத்து யுத்தத்தை என்று கடுப்பாகக் கூறியிருந்தால் அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொன் றொழிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

என்ன செய்வது! எங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நாம் மலையாக நம்பியிருந்தவர்களே எங்களை அழித்தார்கள் என்ற செய்தியை அறிந்தபோது மௌனமாக இருப்பதைவிட வேறுவழி எதுவும் தமிழ் மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இருந்தும் கடந்த வருடம் ஜெனிவாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது சர்வதேசம் நீதி வழங்கத் தலைப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையில், விடிந்தால் பொழுதுபட்டால் ஜெனிவாத் தீர்மானம் பற்றிய நினைப்போடு தமிழ் மக்கள் உறங்கி விழித்தனர்.

அந்தத் தீர்மானம் நிறைவேறியதாயினும், எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. பரவாயில்லை சர்வதேசம் நீதி வழங்கும் போது, தண்டனைக்கு முன் திருத்தத்திற்கான சந்தர்ப்பம் கொடுத்தல் என்ற அணுகுமுறை பிரயோகிக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனால் நடந்தவை; நடப்பவை மீண்டும் தமிழ் மக்களை மௌனிகளாக ஆக்கிவிட்டது. ஒருவரையும் நம்பமுடியாது என்றளவில் ஜெனிவாத் தீர்மானத்தின் நம்பிக்கைப் பெறுமானம் கலைந்து போனதான நினைப்புகள் தமிழ் மக்களுக்கு தாங்கொணாத்துன்பத்தைத் தந்துவிட்டது.

இத்துன்பத்தின் மத்தியில் நாம் நம்ம பாடு, ஜெனிவா எங்களைப்பற்றிக் கதைத்தாலும் ஒன்றுதான் கதைக்காமல் விட்டாலும் ஒன்றுதான் என்ற பரிபக்குவ நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இந்த நிலைமையின் இறுக்கத்தை புரிந்து கொள்ள யாரேனும் முற்பட்டால், ஏதோ படைத்தவன் நினைத்தால் தீர்ப்பு வழங்கட்டும்; அவனும் அவையள் பக்கம் என்றால் அதுபற்றியும் எங்களுக்குக் கவலையில்லை என்ற இருவினைச் சமத்துவம் இப்போது ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

உண்மையில் இத்தகைய இருவினைச் சமத்துவ நிலையில்தான் இறைவன் தர்மத்தைக் காப்பாற்றத்தலைப்படுவான். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

# வெளிநாட்டுச் சுற்றுலாத் துறையினருக்கு ஆகாய மார்க்க சுற்றுலாமுறை அறிமுகம்

அதிகளவு அந்நிய செலாவணியை ஈட்டும்வகையில் கண்டியிலிருந்து புதிய சுற்றுலா அணுகு முறை ஒன்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அதிவேக வீதி அபிவிருத்திகள் இல்லாத காரணத்தால் உள்ளூர் சுற்றுலா மையங்களுக்குச் செல்வதற்கு ஆகாய மார்க்க சுற்றுலா முறையொன்று வெளிநாட்டுச்சுற்றுலாத்துறையினருக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கண்டி போகம்பறை மைதானத்திலிருந்து இது நேற்று ஆரம்பமானது. இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் மூலம் சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். முதல்நாள் நிகழ்வில் 130 பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாத்துறையினர் அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரு ஹெலிகொப்டரில் 25 பேர் வீதம் செல்லக் கூடியதாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக முகாமைத்துவக் கம்பனி ஒன்றின் தலைவர் சந்திரா விக்கிரமசிங்க தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக எமது சுற்றுலாத் துறை பாரிய பின்னடைவைக் காட்டியது. யுத்ததிற்கு முற்பட்ட காலத்தில் ஒரு நாளைக்கு 100 டொலர்களிலும் அதிகமாகச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளைக் காண முடிந்தது.

ஆனால யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில பாரியளவு சுற்றுலாத்துறையினர வருகை தந்த போதும் அவர்கள் நாளாந்தம் 30 அல்லது 35 டொலர்கள் செலவிடுவோராகவே இருந்தனர்.

இது அன்றாட செலவீனத்தை தக்க வைக்கும் துறையாக மட்டுமே இருந்தது. பாரிய முதலீடுகளை மேற்கொள்ளவோ வருமானத்தை அதிகரிக்கவோ முடியாதிருந்தது. தற்போது வசதிபடைத்த சுற்றுலாத் துறையினர் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் ஒரு நாளைக்கு ஆகக் குறைந்தது 500 டொலர்கள் வரை செலவிடுவதன் காரணமாக இலங்கை சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைவதுடன் பாரிய வருமானத்தையும் ஈட்டமுடியும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான சுற்றுலா சபை தேவையான வழிகாட்டல்களை வழங்குவதாகவும் தெரிவித்தார். (2)

# எந்தவொரு அரசாங்கத்திற்கும் அதிகபலம் வழங்க வேண்டாம்

## அகிலவிராஜ் காரியவசம் எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

எந்தவொரு அரசாங்கத்திற்கும் அளவுக்கு அதிகமான பலத்தை வழங்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அளவுக்கதிகமான பலத்தை அரசாங்கத்திற்கு வழங்கியமையின் காரணமாகவே இலங்கை மக்கள் தற்போது பெரும் துன்பத்தில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் பல வழங்கப்படாதுள்ளதாகவும் அவை வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்வதாகவும் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தற்போது பணமுள்ள எந்தவொரு நபராலும் உயர் கல்வியை வீழ்த்த முடியும் எனவும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்களது கல்வி மட்டம் குறித்து எந்தவொரு அக்கறையும் கொள்வதில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக இலவச கல்வி பாரிய அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளதாக அகிலவிராஜ் காரியவசம் சுட்டிக்காட்டினார்.

இலவசக் கல்வியை ஏற்படுத்திக் கொடுத்த தமது கட்சிக்கு அக் கல்வி செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்புவதறகு உரிமை உண்டு என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பிரசாரம் நிறைவு; வன்முறைகள் அதிகரிப்பு

மேல் மற்றும் தென் மாகாண சபைத தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களின் போது வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இரு மாகாணகளிலும் இதுவரையிலும் தேர்தல் வன்முறை சம்பவங்கள் 1008 இடம்பெற்றுள்ளதாக தங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது. (செ-6)

# புலம்பெயர் தமிழர்கள் அரசை குற்றப்படுத்த முயற்சி

## -நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளே மனித உரிமைகளை மீறியுள்ளனர். இலங்கை அரசாங்கம் மீறவில்லையென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஹபரதுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தலைவர்களின் இசைக்கு ஏற்ப நடனமாட சர்வதேச சமூகம் விரும்பவில்லை.

புலம்பெயர் தமிழர்களின் மனித உரிமையை நசுக்கும் விடயங்களில் சர்வதேச சமூகம் ஏமாறக் கூடாது. இலங்கை அரசாங்கத்தை குற்றப்படுத்த அவர்கள் முயற்சிக்கின்றனர்.

நாட்டின் இறையாண்மையை, ஒற்றுமையை பாதிக்கும் கோரிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளமாட்டார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா.மனிதவுரிமைகள் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் நாடு திரும்பியிருந்தார். (2)

# சத்திய தரிசனம்



பஞ்சபூதங்கள் அனைத்தும் மனிதனின் பிராண தத்துவங்கள். இந்தப் பிராணனே இல்லையெனில் வாழ்க்கையே இல்லை. இதில் வாயு என்கிற பிராண தத்துவம் எங்கும் வியாபித்து இருக்கிறது. உன்னுள், உன்னுடன், உன்னைச் சுற்றி, உனக்கு மேல், உனக்குக் கீழ் என்று எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது. உன்னைச் சுற்றியும் கூட அது இருக்கிறது. ஆனால் அது நம் கண்ணில் படுவதில்லை. கையால் பிடிக்க முடியாது. பார்க்க முடியவில்லை, கையால் பிடிக்க முடியவில்லை என்பதால் அதனை இல்லை என்று மறுக்க முடியுமா? இந்த வாயுவே சுவாசம். சுவாசம் போய்விட்டால் சவம். சுவாசமே நமக்குச் சிவம். இந்தச் சுவாச ரூபத்தில் தான் இறைவன் மனிதர்களுக்குக்கிடையே சஞ்சரித்து அனை வரையும் போஷித்து வருகிறார்.

கடவுள் எங்கும் இருக்கிறார். சமுத்திரத்திற்குப் போகிறார்கள். ஆனந்தசாகரத்தில் மூழ்கி எழுகிறார்கள். எவர் எந்த அளவு பாத்திரம் கொண்டு செல்கின்றனரோ அந்த அளவுக்கே நீர் எடுத்துவர முடியும். எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவு நீர்! அதைப்போலவே எந்த அளவு பவித்ர இருதயம் இருக்கிறதோ அந்த அளவு ஆனந்தம் கிடைக்கிறது.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## காலை விழிப்பு

காலையிற் படுக்கையை விட்டு எழும்பொழுது மனதால் பூமாதேவியை வணங்கி தாயே உலகிற்குத் தாயாகிய உன்மீது என் கால்படுவதை பொறுத்துக் கொள்ள வேண்டும் என மனதிற்குள் சொல்லிக்கொண்டு இடது காலை முதலிற் பூமியில் வைக்க வேண்டும். பின்னரே வலது காலை வைக்க வேண்டும். இதனால் இன்று நாம் செய்யப்போகும் காரியங்களில் எல்லாம் வெற்றி உண்டாகும்.

கோயில், வீடு ஆகிய இடங்களுக்குச் செல்லும்பொழுது முதலில் வலது காலை எடுத்து வைத்துச் செல்ல வேண்டும்.

சூரிய உதயத்திற்குமுன் குளித்து தெய்வ சிந்தனையில் ஈடுபடுபவனுக்கு உடற்பலம், அழகு, நல்லசரீரம், வாக்கு பலிதம், நல்ல குணம், தர்ம சிந்தனை, கௌரவம், செல்வாக்கு, புகழ், தனம் ஆகியவை தேடி வரும் என இந்து தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

எனவே, சூரிய உதயத்திற்கு முன் படுக்கையை விட்டு எழ வேண்டும். இதனால் சூரிய வெப்பம் உடல்மூலம் நம்மைத் தாக்காது. இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி கும்பலை விளையாட்டுக் கழகத்தின் மாவட்ட மட்ட தாச்சிப் போட்டி; பண்டத்தரிப்பு அறிவொளி சம்பியன்









அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய மாவட்ட மட்ட தாச்சிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் மாவட்ட மட்டத்தில் தாச்சி போட்டிகளை நடத்தி வந்தது.

24 அணிகள் பங்குபற்றிய போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில் அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதுவதாக இருந்தது.

எனினும் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் போட்டிக்கு சமுகம் தராமையால் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற காட்சிப் போட்டியில் புதுமடம் வைகறை அணியும் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

இப் போட்டியின் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய புதுமடம் வைகறை அணி 6 பழங்களைப் பெற்றது. பதிலுக்கு பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணி 1 பழத்தை மட்டுமே பெற்றமையால் 6:1 என்னும் அடிப்படையில் காட்சிப் போட்டியில் புதுமடம் வைகறை அணி வெற்றி பெற்றது.

போட்டித்தொடரின் சிறந்த கழகமாக புதுமடம் வைகறை அணி தெரிவானது.

இவர்களுக்கான பரிசில்களை வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ் மாவட்ட தாச்சி சங்க தலைவர் சண்முகலிங்கம், யாழ் மாவட்ட தாச்சி சங்க நிர்வாகிகள் ஆகியோர் வழங்கி வைத்தனர். (க-23)

## அனுமதி பெறாத தாச்சிப் போட்டிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### யாழ்.மாவட்ட தாச்சி சங்கம்

யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதி பெறப்படாத தாச்சி போட்டிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அண்மையில் கூடிய தாச்சி சங்கத்தின் ஒழுக்காற்று குழுவே இம் முடிவை எடுத்துள்ளது.

தாச்சி சங்கத்தின் அனுமதிகள் பெறப்படாமல் போட்டிகள் நடத்தப்படுகின்றமையால் பல்வேறு பிரச்சினைகள், ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறப்படாமல் போட்டிகள் இடம்பெறுகின்றமையால் அனுமதி பெற்று போட்டிகளை நடத்தும் அணிகளது போட்டிகளுக்கு சிக்கல் எழுகின்றது. இதன் காரணமாகவும் கட்டுக்கோப்பாக தாச்சியை வளர்த்தெடுக்கும் முகமாகவுமே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட தாச்சி சங்கம் தெரிவித்துள்ளது.

இம் முடிவுகளை மீறுவோரின் மீது சங்கயாப்பு விதிமுறைகளுக்கமைவாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.வலய பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; நாவாந்துறை றோ.க. முதலிடம்



யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகள் பங்கேற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் முதலிடம் பெற்றது.

இரண்டாமிடத்தை சென்.சார்ள்ஸ் மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. மேற்படி சுற்றுப்போட்டி அண்மையில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வருட வெற்றியுடன் யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயம் மூன்றாவது வருடமாக தொடர்ந்து முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)







சண்டிலிப்பாய்க் கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இங்கிலாந்து இன்று பலப்பரீட்சை

20 ஓவர் உலகக்கிண்ண தொடரில் இன்று 2 ஆட்டங்கள் நடக்கின்றது. இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு தொடங்கும் முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா - நெதர்லாந்து அணிகள் மோதுகின்றன.

தென்னாபிரிக்க அணி ஆரம்ப ஆட்டத்தில் இலங்கையிடம் தோல்வியடைந்ததுடன். பரபரப்பான 2-வது ஆட்டத்தில் ஸ்ரெய்னின் அபாரமான பந்துவீச்சால் நியூசிலாந்து 2 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.






இன்று நடைபெறும் ஆட்டத்தில் பலவீனமான நெதர்லாந்தை வீழ்த்தி 2-வது வெற்றியை பெற தென்னாபிரிக்காவுக்கு வாய்ப்பு உள்ளது.

இரவு 7 மணிக்கு நடைபெறும் 2-வது ஆட்டத்தில் இலங்கை- இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டிய நெருக்கடி இங்கிலாந்துக்கு உள்ளது. முதல் ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தோற்று இருந்தது. இலங்கையிடம் தோற்றால் இங்கிலாந்து அணி அரை இறுதி வாய்ப்பை இழந்து விடும்.

இலங்கை அணி தொடக்க ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வென்று இருந்தது. 2-வது ஆட்டத்தில் நெதர்லாந்தை நொறுக்கி தள்ளி இருந்தது. இங்கிலாந்தை வீழ்த்தி ஹட்ரிக் வெற்றி பெற்று அரை இறுதியில் நுழையும் ஆர்வத்தில் இலங்கை அணி உள்ளது.

## போர்க்...

நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமை கண்காணிப் பகத்தின் ஜெனீவா பிரதிநிதி ஜுலைட்டிடி ரிவிரோ தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பதுடன் குற்றச்சாட்டுக்களை முன்வைப்போரை இலங்கை அரசாங்கம் எதிர்த்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தீர்மானமொன்றை நிறைவேற்றுவத்ன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் உதாசீனம் செய்யப்படவில்லை என்ற வலுவான செய்தியை உலகுக்கு உணர்த்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்கள் தொடர்பில் முழு அளவில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநதம்பிள்ளை ஜெனிவாவில் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## யுத்த...

காங்கிரஸ் கட்சியினால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை இன சமூகங்களினதும் உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. வடக்கு கிழக்கில் உரிய அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது. தமிழ் பேசும சிறுபான்மை மக்களின் வாழ்க்கையை கௌரவமான முறையில் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளது. அண்டை நாடுகளுடனும் ஏனைய பலம்பொருந்திய நாடுகளுடனும் சிறந்த உறவுகளைப் பேண விரும்புவதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (செ-6)

## யாழில்...

பெண்ணின் வீடு அமைந்துள்ள காணிக்குள் இரண்டு வீடுகள் இருக கின்ற நிலையில் அந்த வீட்டிலிருந்து தங்கள் வீட்டுக்கு தற்காலிகமாக மின்சாரம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அருகில் இருந்த வீட்டிலிருந்த மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு குறித்த பெண் முயற்சி செய்த வேலையில் மின்சாரம் இவர் மீது பாய்ந்து இவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இருப்பினும் அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

## ஜெனிவா...

நடந்துள்ளதாகக் குற்றம் சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றே தேவைப்படுகின்றது என்றும் அவ்வாறான சர்வதேச விசாரணை சாத்தியமானது என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

புதிதாக வந்துகொண்டிருக்கின்ற ஆதாரங்களும் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றின் முன்னால் சாட்சியமளிப்பதற்கு சாட்சியாளர்கள் முன்வருகின்றமையும் தமது இந்த நிலைப்பாட்டுக்கு காரணம் என்றும் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவாவில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இலங்கை மீதான விவாதத்தின்போது தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படுகின்ற தீர்மான முன்-வரைவு உறுதியாகி விட்டதாக நம்பப்படுகின்ற நிலையில். அடுத்த கட்டமாக வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. அதற்கு முன்னதாக, இலங்கை மீதான விவாதம் நடைபெற்றது.

விவாதத்தை தொடங்கி வைத்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில முன்னேற்றங்களை காட்டியிருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறுகின்ற போதிலும், முக்கியமான பல விவகாரங்களில் இன்னும முன்னேற்றம் எட்டப்பட வில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை ஜெனிவா அமர்வு நடந்து கொண்டிருக்கும்போது கூட இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களை ஒடுக்கும் வேலைகள் நடந்துவருவதாகவும் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டினார்.

'இந்த சந்தர்ப்பத்தில் புதிய ஆதாரங்கள் வெளியாகி வருகின்றன. சாட்சியாளர்களும் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய சர்வதேச பொறிமுறை ஒன்றுக்கு முன்னால் வாக்குமூலம் அளிப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். சர்வதேச விசாரணை ஒன்று தேவைப்படுகிறது என்பதை மட்டுமல்ல. அது சாத்தியமானதும் கூட என்பதையே இவை காட்டுகின்றன' என்று நவநீதம்பிள்ளை வலியுறுத்தினார்.

**'கிளிநொச்சி சம்பவங்கள்'- ஆதாரம் என்கிறது இலங்கை**

'விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைகிறார்கள் என்பதற்கு ஆதாரம் உள்ளது'

ஆனால், ஒரு நாட்டில் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள், அந்த நாட்டின் சம்மதத்துடனேயே எடுக்கப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால், நல்லிணக்க நடவடிக்கைகளில் நுண்ணிய சமநிலை பாதிக்கப்படும் என்றும் இலங்கைப் பிரதிநிதி ஐ.நாவில் வாதிட்டார்.

நவிபிள்ளையின் அறிக்கையும் அவரது நிலைப்பாடும் தவறான தகவல்களை ஆதாரங்களாகக் கொண்டிருப்பதாக பேசிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, இலங்கையில் வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

'குறிப்பாக கிளிநொச்சியில் நடந்த அண்மைய சம்பவங்களும், பயங்கரவாதிகள் மீண்டும் ஒன்று கூடுவதாக கிடைத்துள்ள ஆதாரங்களும் முன்னாள் போராளி ஒருவர் சம்பந்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவமும் எங்களின் கவலைகளை மேலும் உறுதிப்படுத்துகின்றன' என்றார் ரவிநாத் ஆரியசிங்க.

வெளிநாட்டிலிருந்து இயங்கும் விடுதலைப்புலிகளின் விரிவான வலையமைப்பு ஒன்றின் மூலம் இந்த நடவடிக்கைகள் நடந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட பல நாடுகள் நவிபிள்ளையின் சர்வதேச கோரிக்கையை வரவேற்றுப் பேசின.

அண்மைக் காலங்களாக மதச் சிறுபான்மை சமூகங்கள் மீது நடந்துவரும் தாக்குதல்கள் பற்றியும் வடக்கில் இராணுவத்தினர் பொதுமக்களின் சிவில் வாழ்க்கையில் தலையீடு செய்கின்றமை பற்றியும் அமெரிக்கா சுட்டிக்காட்டியது.

முன்னாள் யுத்த வலயங்களில் பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் நடந்துவருகின்றமை தொடர்பில் நவிப்பிள்ளை எழுப்பிய கவலைகளை தாமும் எதிரொலிப்பதாகவும் அமெரிக்கப் பிரதிநிதி கூறினார்.

ஆனால்,பாகிஸ்தான், கியூபா, ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கை சார்பில் குரல் கொடுத்தன.

இலங்கை அதன் தேசிய சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதற்கு சீனா ஆதரவளிக்கிறது' என்றார் சீனப் பிரதிநிதி.

இலங்கையின் உள்விவகாரங்களில் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையரின் அறிக்கை நேரடியாக தலையிடுவதாகவும், மனித உரிமைகள் விவகாரம் சில நாடுகளால் தங்களின் பூகோள அரசியல் தேவைக்காக பயன்படுத்தப்படுவதாகவும் ரஷ்யா உள்ளிட்ட அணியினர் தெரிவித்தனர்.

**இந்தியா மௌனம்**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இம்முறை அமர்வில் இலங்கை விவகாரம் தொடங்கிய நாள் முதலே இந்தியா எந்தவிதமான நிலைப்பாட்டையும் இதுவரை தெளிவாக வெளிப்படுத்தவில்லை. இன்றைய விவாதத்திலும் இந்திய பிரதிநிதி எதுவும் கூறாமல் மௌனம் காத்தார்.

மனித உரிமை ஆர்வலர்களான ருக்கி பெர்ணான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோரின் கைது பற்றியும் பல்வேறு நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் ஜெனிவாவில் விமர்சித்திருந்தன. (செ-6)

## ரி.ஐ.டி...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் ஒட்டுமடத்திலுள்ள தனது சகோதரியின் வீட்டில் வைத்து ஆள் அடையாள அட்டை இல்லாத நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வடமராட்சி உடுப்பிட்டி வடக்கு கொம்பாந்தரை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் விசாரணைக்கென அழைத்து பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர். அதேஇடத்தைச் சேர்ந்த துரைராஜா அமுதாகரன் (வயது 28) என்ற இளைஞனே நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள ரி.ஐ.டியினரின் அலுவலகத்திற்கு விசாரணைக்கென அழைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் தேடப்பட்டு வந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதேவேளை வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர்களுடன் ஐந்து பேர் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து வடக்கில் கடந்த இரண்டு வாரத்திற்குள் 25 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் மட்டும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் தொடர்ந்தும் விசாரணைகளுக்குட படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புதிய தலைவர் என்று கூறப்படும் கோபி எனப்படும் கசியன் மற்றும் நவநீதன் எனப்படும் அப்பன் ஆகிய இருவரும் தேடப்பட்டு வருவதாக வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எங்கும் பரவலான துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் துண்டுப்பிரசுரங்களை ஒட்டியதோடு அங்கு மறைந்திருந்ததாக கூறி கோபின் மனைவியை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் அண்மையில் கைதுசெய்தனர்.

தேடப்படுபவர்களின் சுவரொட்டியில் இருவரின் புகைப்படங்களும் பிரசுரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த இருவரும் அதிகளவிலான குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் இவர்களைப் பற்றிய தகவல்களைத் தருபவர்களுக்கு ஐந்து லட்சரூபாய் சன்மானம் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி துண்டுப்பிரசுரம் தற்போது யாழ்.மாவட்டத்திலும், திருநெல்வேலி, நல்லூர், நெல்லியடி, பருத்தித்துறையென பல பகுதிகளிலும் இந்த துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி துண்டுப்பிரசுரத்தை கிழித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவத்தினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியைச்சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்களை நேற்று முன்தினம் இராணுவத்தினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்கள் நான்கு பேரும் தற்போது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடக்கில் இராணுவத்தினரால் திடீர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் கைது நடவடிக்கைகள் தமிழ்மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6,24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரட்டை மேல்மாடி வீடு வாடகைக்கு

A9 கண்டி வீதியில் (கச்சேரிக்கு மிக அண்மையில்) அமைந்துள்ள இரட்டை மேல்மாடி வீட்டில் 6 அறை, 2 பெரிய கோல், சமையலறை, இணைந்த குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 675 8002, 075 503 2515

(அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

## Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புகள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

## Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

## IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

## BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

## A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 29.03.2014 | 31.03.2014 | 05.04.2014 | 07.04.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(C-6836)

# பேக்கரி உரிமையாளர்கள், கேக் தயாரிப்பாளர்கள், பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!

காலம் காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது 01 Kg பைக்கற்றில் !! மிருதுவான கேக் தயாரிப்பதற்கும், அனைத்து வகையான பேக்கரி மற்றும் பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள். தரத்திற் சிறந்த விலையில் குறைந்த

"றோயல் பேக்கிங் பவுடர்"




Specially Made for Bakery Uses

Manufactured By:-
Royal Industries
No.22, 1/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-13.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே:0212222567

(C-6841)

# 3 தினங்களில் உங்கள் கனடாக் கனவு கலைந்து போகுமா?

வெறும் 23 இலட்சங்களில் 50 வயது வரை கனடாவில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனைக்கு

நிறைவு நாள் 30.03.2014

விரையுங்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 499 3501



(C-6840)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

ONLY OFFICIAL FRENCH CENTRE.

FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது.

- உலகில் FRENCH கற்பிப்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் சர்வதேச நிறுவனம் AF. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- அதியுயர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. (பிரான்ஸ் நாட்டவரும் கலாநிதியுமான GERARD உட்பட)
- Certificates & International Diplomas

புதிய வகுப்புகள் மிக விரைவில்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

(6006)

# 45-ம் நாள் நினைவு வணக்கமும் நன்றி நவிலலும்



அமரர் செல்வி கலைச்செல்வி சிவகுரு

தோற்றம் :- 16.02.1971
மறைவு :- 11.02.2014

11.02.2014 அன்று இவ்வுலக வாழ்வை விட்டு இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் கலைச்செல்வி சிவகுரு அவர்களது 45-ம் நாள் நினைவு வணக்க வழிபாடுகள் அவரது இல்லத்தில் இன்று காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். அன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அவரை காப்பாற்ற அயராது பாடுபட்ட வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோருக்கும் அன்னாரின் திடீர்மறைவால் அதிர்ச்சியுற்ற வேளையில் எமக்கு பக்கபலமாக நின்று உதவிய முருகமூர்த்தி இளைஞர் ஒன்றியம் மற்றும் நண்பர்கள், உறவினர்களுக்கும், அன்னாரினது இறுதி கிரியைகளில் பங்கு கொண்டும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறி தமது அனுதாபங்களை வெளியிட்ட தீவக கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்கள், முதன்மை ஆசிரியர்கள், அதிபர்கள், யாழ்.கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள், கதிரவன் வர்த்தக நிறுவனத்தினர் மற்றும் வர்த்தகர்கள், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள், பத்திரிகையாளர்கள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் ஆத்ம சாந்தி கிரியைகளை நிறைவேற்றிவைத்த சிவாச்சாரியர்கள் அன்னாரின் நினைவாக நடத்தப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றி கூறுகின்றோம். அன்னாரது நினைவாக நடத்தப்படும் மாணவர்களுக்கான கருத்தரங்கின் தொடர்-02 எதிர்வரும் 09.04.2014 இல் காலை 09 மணிக்கு யாழ்ப்பாணம் D.M.I மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் அன்று அன்னாரது நினைவு நூல்களின் வெளியீடும் இடம்பெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

45/16 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(6004)

# புதுவருடத்தை முன்னிட்டு

offer of the WEEK

HP Pavilion 15




- Core i3 3rd Gen
- 2 GB DDR3 Momery
- 500 GB HDD
- DVD / RW DL
- 15.6" LED Display
- Intel HD Graphices
- WiFi / Bluetooth
- WebCam
- O/S DOS free
- HP Laptop Bag
- Warranty:1Y/1Y/1Y

*கையிருப்பில் உள்ளவரை....

Offer
Dongle 7.2 Mbps
Mouse with pad
Headphone w/ Mic
Expert cleaner
M.M Speaker
8GB Pendrive
Rs.4990/=

@ 60,900/= மட்டுமே!

SDS Computer Technologies
#48, College Road
Neeraviady Jaffna
Tel Fax:- 021 2224500
Hotline:- 0777 874705

Sales, Repair & Maintenance,Software Develop. and Etc

(C-6843)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org